உ

உதயகிரிநாதன் துணை.

மதுரை இ. ராம. குருசாமிக் கோனாரவர்களால்
திரட்டிய பூசாரிகள் குறி சொல்லும் புதிய
முத்துக்குறி சோதிடம் சேர்ந்த

# காடாங்கி மாலை.

மந்திர யந்திர பூஜாவிதிகள் அடங்கியது

2-ம் பாகம்

7 NOV 1968



ஜி. இராமசாமிக் கோன்

அவர்களாற்றமத,

...சிவீதி, குருசாமிக் கோனார் சந்து,
...ந்திர விலாசம் பிரஸில்
...ப்பிக்கப் பெற்றது.

[காப்பி ரைட்

O-,194,1C
D156.2
102460

உ

உதயகிரி நாதன் துணை.

258
2-56

மதுரை இ. ராம குருசாமிக் கோனாரவர்களால்
திரட்டிய பூசாரிகள் குறி சொல்லும் புதிய
முத்துக்குறி சோதிடம் சேர்ந்த

# கோடாங்கி மாலை.

மந்திர யந்திர பூஜாவிதிகள் அடங்கியது.

**2-ம் பாகம்**

O-,194K
N56·2



மதுரை புதுமண்டபம் புத்தக ஷாப்
ஜி. இராமசாமிக் கோன்
அவர்களாற் றமது,
மதுரை வடக்குமாசி வீதி, குருசாமிக் கோனார் சந்து,
...சந்திர விலாசம் பிரஸில்
... பெற்றது.

[காப்பி ரைட்

உ

பரமபதி துணை.

கோடாங்கிகளுக்கும் பூசாரிகளுக்கும் வேண்டிய

# கோடாங்கி மாலை.

## இரண்டாம் பாகம்

### முதலில் சகல தெய்வத்தையும் வணங்குதல்

ஆதிக் கணபதியே அருட்சேர் பரஞ்சுடரே
சோதி பராபரையே சுந்தரியே வாக்கருள்வாய்
புள்ளி மயிலேறும் புனித வடிவேலா
வள்ளி மணவாளா வந்திரங்க வேணுமிப்போ
பாவிற் குதவிசெய்து பண்பாக இப்போது
நாவிற் சரஸ்பதியே நல்லவாக்குத் தந்தருள்வாய்
அந்தாத் தோர்வந்து அனுதினமும் பூஜைசெய்யுஞ்
சுந்தரச் சொக்கையா துணையாக வந்தருள்வாய்
ஆயன் சகோதரியே அம்பிகையே மீனாட்சி
சேயன் மயங்காமற் சீராக வாக்கருள்வாய்
மகாவிஷ்ணு வான வள்ளலே யிப்போது
சுகாதீதமாகத் துதித்தேன் வரங்கொடுப்பாய்
நல்ல வரங்கள் தந்து நாடெங்குங் கீர்த்திபெற்று
செல்வங்கள் தந்த சீரான லெட்சுமியே
சதுரகிரியில் சகல சித்துந் தான்காட்டி
மதுரங் கொடுத்த மகாலிங்க னைப்பணிந்தேன்
சதமெனவந் தோர்க்குவரம் தான்கொடுக்கும் மாவூற்று
உதயகிரி நாதா உனைப்பணிந்தேன் வாக்கருள்வாய்
..ருமையுடன் மாவூற்றில் உலகோரெல்லாம் புகழும்
..ருநாதா நீயென் குறிமுகத்தில் வந்தருள்வாய்
..ரியன் றன்முதலாய்ச் சூழ்ந்த கிரகமெல்லாம்
வீரியஞ் செய்யாமல் வேண்டும் வரந்தருவாய்
திட்டமுள்ள ராட்சதர்கள் திரளாய் வளைந்தவரை
அட்ட திசைவென்ற அநுமானே வந்திடுவாய்

உற்றதொரு தக்க னுயர்சிரசைக் கொய்துவந்த
வெற்றி மதயானை வீரபத்திரா வந்திடுவாய்
கழனிவயல் சூழுங் கனகமலை மேலிருக்கும்
பழயாண்டிக் குமரா பாலனுக்குவாக்கருள்வாய்
ஆதிகம்பை யாற்றி லருந்தவசு செய்துநின்ற
சோதிசிவ காமாக்ஷி சொல்லிவரந் தந்தருள்வாய்
மங்காத ஞான மணிவிளக்காய் வந்தருளும்
அங்காள தேவியெனை யாதரிக்க வந்திடுவாய்
மாளிகை மேலிருந்து மார்த்தாண்ட னைக்கார்த்த
காளியம்மை யிப்போ காப்பாற்ற வந்திடுவாய்
பத்தினிப்பெண் ணென்று பாரெல்லாம் பேருபெற்ற
சத்தகன்னி யான தாயே நீ வாக்கருள்வாய்
பொற்பலகை மேலிருந்து பூலோகம் ஆண்டுவந்த
துர்க்கையம்மா ளிப்போ துணைசெய்ய வேணுமம்மா
விலாட புரத்தில் வெற்றிக்கொடி நாட்டிவைத்த
இலாடசந்நி யாசியே நீ இப்போது வந்தருள்வாய்
ஆர்த்தபெரும் பூதமதை அஞ்சிப் பதுங்கவைத்த
தீர்த்தக்கரை ராக்குச் செல்வியே வந்திடுவாய்
வீரியம் பேசிவந்த வீரர்களை வெற்றிகொண்ட
மாரியம்மா ளிப்போ வந்திரங்க வேணுமம்மா
ஐம்பந்தோ ரட்சரத்தி லாடி யருள்கள்பெற்ற
ஒன்பது கம்பளத்தி லுயர்சக்க தேவியேவா
ஆச்சி பெண்ணுச்சி அருள்மிகுந்த என்னுச்சி
பேச்சியம்மா ளிப்போ பேணிவா வேணுமம்மா
உமையா ளருளால் உலகேழுங் கொண்டாடும்
சமையனனே யிப்போ தற்காக்க வந்தருள்வாய்
எப்பாரி ளோரும் எழுந்துபணிந் தே போற்றும்
சப்பாணி தன்னை சதாகால முப்பணிவேன்
அனியாயஞ் செய்த அரும்பேயை வெற்றிகொண்ட
முனியாண்டி என்றன் முன்பாக வந்தருள்வாய்
கடலை யவலோடு காணிக்கை தான்வாங்கும்
சுடலைமுத் தையா சுகங்கொடுக்க வந்தருள்வாய்

சேனை தளத்தோடு சென்றசுர ரைத்தொலைத்த
சோணை முத்தையா சுந்திரமாய் வந்திடுவாய்
சதிரான கள்ளர்களைத் தானடக்கி வைத்திருந்த
மதுரை வீரையா வரவேணு மித்தருணம்
நாட்டைவிட்டுத் துண்டாய் நடுமலையிலே யிருக்கும்
கோட்டமலைக் கருப்பா குபேரா நீ வந்திடுவாய்
கார்காட்டில் வேண கணபணிதி தந்தருளும்
மார்நாட்டுப் பொன்கருப்பே வந்தெனக்கு வாக்கருள்வாய்
அன்னியர்கள் சொந்தமுடன் அன்பாய்ப் பூசித்துவரும்
வன்னியனு மிப்போ வந்தருள வேணுமையா
சேமந் தனைக்கொடுத்து செண்பகத் தோப்பில்வளர்
பேமலை ராக்கு பேணியிங்கு வந்திடுவாய்
எந்தநாளுந் தானும் இடையரை ரட்சித்துவந்த
சந்தணமா ரித்தாயே தருணமிதில் வந்திடுவாய்
மேவு பனைமரத்தின் மேலிருந்து காட்சிதந்த
ஆவுடை நாயகியா ளம்மாளே வந்திடுவாய்
செல்வம் பெருகும் சிவகங்கை நாட்டில்வளர்
வல்லமுத்து வீராயி வந்திடுவா யிப்போது
கலைகள் தெரிய கற்பித்த மாரிமுத்தே
மலையனூ ரெல்லைவிட்டு வரவேணு மென்தாயே
நேயமுள்ள மாரியம்மா நீயெழுந்து இப்போது
தாயனூ ரெல்லைவிட்டுத் தான்வரவும் வேணுமம்மா
விருப்பதிக மாக வேணுமென மலைமேல்
திருப்பதிவாழ் நாதா திருவேங் கடத்தானே
ஓ ரெங்க நாதரென்று உலகெலாந் தான்போற்றும்
ஸ்ரீரெங்க நாதா திருவாக்குத் தந்தருள்வாய்
அக்கரைப் பட்டியினி லதிகாரந் தான்செலுத்தும்
உக்கிரமுனி யாண்டி உரிமையுடன் வந்திடுவாய்
வாசா மகோசரத்தின் மார்க்கமதைக் கண்டுணர்ந்த
மாசானத் தையா வந்துகுறி சொல்லிடுவாய்
வல்லபமான வையம்பட்டிச் சடைச்சி
நல்லவரங்கொடுக்க நாரணியே வந்திடுவாய்

சந்திரா யழகனுட சன்னிதியைக் காததிருக்கும்
பதினெட்டு லெக்கப் படிக்கருப்பா வத்திடுவாய்
ஆரந்தான் பெருக அவனிதனைப் படைத்த
பிரமதேவன் பாதம் பேணியே போற்றிடுவேன்
கருப்பண சாமியுடன் கருக்குவாலையனையும்
விருப்பதிகமாக வேண்டி மிகப்பணிவேன்
ஆரணங்களெல்லாம் அறிநதுவெளி யேறிவந்த
வீரணனை யெப்போதும் வேண்டி மிகப்பணிவேன்
குருபத்தி யோடு குமரன் றனைப்பணியும்
இருபத்தோர்பந்தி இருக்குங் கலிதீர்த்தான்
எங்கும் பரிமளிக்கும் இயல்சப் பரத்தடியான்
சங்கிலிச் சாமி தனைப்பணிவே னெப்பொழுதும்
மெய்யான தேவதையாய் விளங்கி வருகின்ற
அய்யனார் தன்னை அடைவாகப் போற்றிசெய்வேன்
அருளோ டிருக்கும் அப்பனிரு ளப்பனையும்
திருவாய் விளங்குந் தேவனையும நான் பணிவேன்
எற்றிப் பணிந்தேன் இருளாயி தன்னையுந்தான்
போற்றி நிதந்தொழுவேன் புகழ்தரும தேவதையை

விநாயகரை வரவழைத்தல்.

மூலப் பொருளே முப்பொருளே முக்குணமே
ஆதிக் கணபதியே அருள்சேர் பரஞ்சுடரே
வேதம் வகுத்த விநாயகனே வந்தருள்வாய்
ஐந்து கரத்தோனே யானை முகத்தோனே
வல்லபையைத் தன் துடையில் வைத்த பெருமானே
சித்திக் கணபதியே செல்வக் கணபதியே
முத்திக்கு வித்தே முடிக்கணியுஞ் சோதிமுத்தே
கந்தனுக்கு மூத்த கரிமுகனே வந்திடுவாய்
ஓங்கார நாதன் உயராகு வாகனத்தான்
ஆதா ரத்தி லமர்ந்த செழுஞ்சுடரே
பாங்காய் குறிமுகத்தில் பண்பாக வந்திருந்து
வாக்குக் கொடுத்து வரந்தரவும் வேணுமையா.

சுப்பிரமணியரை வரழைத்தல்.

ஆறுமுக நாதா அம்பிகைதன் பாலகனே
கந்தா கடம்பா கார்த்திகேயா வா வா வா

மாயோன் மருமகனே வள்ளிமண வாளா வா
மலைமுனிக் கன்னுளில் மந்திரங்கள் சொல்லிவைத்த
சரவண பவானந்த சண்முகனே வாவாவா
சூர்குல காலா சுப்ரமண்யா வாவாவா
காங்கேய னை கங்கைமைந்தனே வாவா
குமா குருபரனே குறத்திமகி ழுங்கணவா
பச்சைமயி லேறும் பழனிமலை வேலாவா
மாம்பழத் திற்காக வலமாக வந்தோனே
தேவரிடுக் கந்தீர்த்த தெய்வமே வாக்கருள்வாய்

பரமேஸ்வரனை வரவழைத்தல்

பரமேசுவரன் பகவன் பட்சமுள்ள கங்காளன்
முக்கண்ணன் நீறணிந்தோன் மூதண்ட நீலகண்டன்
சந்திர சேகரனுஞ் சப்பு சுடலையாடி
மங்கையோர் பாகன் வளர்பரசு பாணி நண்பன்
சதாசிவ லிங்கன் சங்கரன் மகாதேவன்
இறையோன் நடராசன் ஈசுரன் பூதநாதன்
கலியாண சுந்தரன் கடம்பவனச் சுந்தரமே
சோதிச் சுடரொளியே சோமசுந்த ரேஸ்பரனே
சொக்கலிங்க மான சோதிலிங்கம் நாதாவா
மாணிக்க லிங்கம் மகாலிங்கம் நாதா வா
சுந்தர லிங்கம் சோமலிங்க மூர்த்தியே வா
மீனுட்சி சுந்தரமாய் விளங்கும் பிரணவமே
மாணிக்க சுந்தரமே வாக்கருள வந்திடுவாய்

பார்வதியை வரவழைத்தல்.

பார்வதி மீனுட்சி பாண்டிமா தேவியம்மா
சத்தி விசாலாட்சி சாம்பவி தாட் சாயணியே
மாது மலைமகளே மலையரசன் புத்திரியே
அம்பிகையே காமாட்சி அம்மை சிவகாமி
வாலை திரிபுரையாள் மகிழ்வான நற்கெவுரி
சுந்தரி உண்ணுமுலையாள் சோதிதையல் நாயகியே
கோமதி வாராகி கூறும் பராபரையே
காந்தி மதியே கருணையுள்ள நீலாட்சி

அகிலாண்ட யீஸ்வரியே ஆதியன்ன பூரணியே
மலையாசன் புத்திரியே மங்கள யீஸ்பரியே
பாண்டியா தேவி பருவதா பத்தினியே
தருமசம் வர்த்தினியே சாம்பசிவ சத்தியே வா.
வைத்த குறியின் வழக்குகளைச் சொல்லுமம்மா.

மகாவிஷ்ணுவை வரவழைத்தல்.

மாதவ கோவிந்தன் மாயாவ தாரரெனும்
தாமோதரான் முகுந்தன் சாரங்கபாணி நண்பன்
அனந்த சயனன் அச்சுதன்யால் விஷ்ணுவுந்தான்
வைகுந்த நாதன் வரதவெங்க டேசுரனும்
வாசுதேவன் நெடியோன் வசுதேவகி பாலன்
உலகளந்தோன் கண்ணன் உரகசயனம் மூர்த்தி
நரசிங்க ரூபன் நற்கருட வாகனத்தான்
ஸ்ரீரெங்க நாதன் ஸ்ரீராகவன் வரதன்
நாராயணப் பெருமாள் நல்லாதி மூலமெனும்
பாரளந்த பாதன் பத்மநாதன் புனிதன்
கிருஷ்ணவ தாரன் கேசவ நாராயணனே
காராளி வண்ணன் கமலாசனிக் கணவன்
சங்குசக்க ராயுதன் சகடந் தனையுதைத்தோன்
துளபமணி மார்பன் சோலைமலை யழகன்
சுத்தரா ராஜப்பெருமான் சோதி செகதீசன்
பச்சைமா லச்சுதன் பாண்டவர் சகாயனனே
ஸ்ரீ ராமச் சந்திரன் தேவர்க் குபகாரன்
மூராரி பரந்தாமன் மூர்த்தி திருமார்பன்
நீலமேக ஞன நிரஞ்சனனே வாக்கருள்வாய்

இலட்சுமி தேவியை வரவழைத்தல்.

சீதையுடன் லட்சுமியே தேவிநல்ல ஜானகியே
ஆக்கமுடையாள் ஆதிலட்சுமி இந்திரையே
தானிய லெட்சுமியே தனலட் சுமியேவா
வீரலெட் சுமியான விஜயலெட் சுமியேவா
மகாலெட் சுமியாக வாய்த்தசொர்ண லெட்சுமியே
சவுபாக்கிய லட்சுமியே சவுந்தா லட்சுமியே
சுப்புலெட் சுமியேயான சுந்தா லெட்சுமியே

அனவரத லெட்சுமியே அன்ன லெட்சுமியேவா
ஆனந்த லெட்சுமியே அழகுள்ள லெட்சுமியே
எல்லோரை யுங்கார்க்கும் இராம லெட்சுமியே வா
வடிவான. லெட்சுமியே மாதுமுத்து லெட்சுமியே
நானிலத்தோர் போற்றும் நாச்சியா ரம்மா வா

பிர்மதேவனை வரவழைத்தல்.

ஆதிபிர்ம தேவா அன்பாக வந்திடுவாய்
உந்தி வளர்ந்தோ னுயர்மறையோ னேவாவா
எல்லோர்க்கும் வல்ல இறையோனே வாவாவா
அன்னவா கனத்தா னருட்சேர் பிதாமகனே
நான்முகனே வந்து நல்வாக்குத் தந்தருள்வாய்
வேதா விநோதா விரிஞ்சகனே வந்திடுவாய்
அப்புவியோ ரைப்படைத்த அய்யனே நீ வந்திடுவாய்
கலைமகள் மணாளா காப்பாற்ற வாவாவா
வாணி கொழுனனும் ம்ந்திரரூபா வாவாவா
வந்தென் குறிமுகத்தில் வாக்கருள வேணுமையா

சரஸ்வதியை வரவழைத்தல்

கலைமகளென் னாவிலுறை காயத்திரி வந்திடுவாய்
இசைமடந்தை யான இயல்மடந்தை வாவாவா
வெள்ளக் கலையாளே விமலியே வாக்கருள்வ்ாய்
நாமகளே யிப்போ நல்வரங்கள் தந்திடுவாய்
பார்முழுதும் வாக்குதவி பண்ணுகின்ற பாரதியே
பூலோக ரட்சகியே பூபதியே வாவாவா
ஆதிபிர்ம தேவர்க் கன்பான பத்தினியே
நான்முகத்தோன் நாவிலுறை நாயகியே வாவாவா
சரஸ்வதியென் னாவிலிருந்து சகலவர மூங்கொடுத்து
வந்திருந்து இப்போ வாக்குதவி செய்திடுவாய்

வயிரவ மூர்த்தியை வரவழைத்தல்.

முடுவர் படையோன் முத்தனே வாவாவா
கேந்திர பாலன் கிருபைதரும் நற்காரி
பைரவ ரூபத்தாலே பார்முழுதும் காவல்கொண்டாய்
வடுகனென்று பேறுபெற்று மால்கொண்டா யன்னோம்

உருத்திகளப் பூமியிலே உருமநேரத்தினிலே
காவலது பெற்றுக் காத்த வயிரவனே
ஆலயங்கள் நாற்றிசையும் அடைவாக காவல்கொண்டாய்
ஆசான் மயங்காமல் அம்பலத்தோ ரேசாமல்
வாக்குத் தவருமல் வந்தெனக்கு வாக்கருள்வாய்
குறிமுகத்தில் நின்று குறியெனக்குச் சொல்லுமையா

## அய்யனுரை வரவழைத்தல்.

அரிகரன் புத்திரா அய்யனுரே வாவாவா
பூரணை கேள்வன் புரத்தவனே வாவாவா
புஷ்கலை மணாளன் புகழ்சாத்தா வாவாவா
அம்புவியோர் போற்று மவனிகடல் வண்ணனேவா
கலிதீர்த்த அய்யன் கருக்குவாலையனுக்கு
துன்பங்கள் தீர்த்துவைத்த துரைராஜ அய்யாவா
காத்தில் பிறந்த கருணாகரா வுனது
வரத்தினுல் வந்த மக்களைக்காப் பாற்றஇப்போ
வந்து குறிமுகத்தில் மகிழ்வாகவேயிருந்து
வாக்குக்கொடுத்து மகிழ்வாய்க் குறிசொலுவாய்

## தேவர்களை வரவழைத்தல்.

அண்டர்கள் வானேர்க ளய்யாவே வந்திடுவாய்
எல்லோர்க்கும் வல்ல இமையவரே வாவாவா
விண்ணுலகோர் மெச்சும் வேதாந்த னேவாவா
பார்தனிலுள் ளோர்போற்றப் பண்பாக வாவாவா
உலகுயிரைக் கார்க்கும் உம்பர்களே வந்திடுவீர்
சோதிமயமான சூரர்களே வாக்கருள்வாய்
இந்திராதி தேவ ரெல்லோரும் வந்திருந்து
வாக்குதவி செய்ய வந்திடுவா யிச்சமயம்
பாக்கியமென் றுங்கள் பதம்பணிந்தே னிப்போது
வைத்த குறிக்கு வகைசொல்ல வேணுமையா

## தரும தேவதைகளை வரவழைத்தல்.

தெய்வப்பொரு ளாய்த்தரும தேவதைக ளாய்விளங்கும்
பகவதியே லெட்சுமியே பரமசுந்த ரேஸ்வரியே
செகத்தி லரத்தின் செல்வியே வந்திடுவாய்

எசக்கியே அம்பிகையே இப்போதே வாவாவா
சவுந்தர வல்லித் தாயே நீ வந்திடுவாய்
மரகத வல்லி மாணிக்க வல்லியேவா
பூரண வல்லி பூலோக வல்லியே வா
சுந்தர வல்லி சுமுகமுள்ள வேதவல்லி
செண்பக வல்லி ஸ்ரீதர வல்லியேவா
இந்தக் குறிக்கு இப்போதே வாக்கருள்வாய்

காளிகாதேவியை வரவழைத்தல்.

மாரி கௌரி மகமாயி ராஜ கன்னி
மகாளி காளி மணிமந்திர ரூபியே நீ
மாலினி சூலி மாதங்கி சாமூண்டி
பைரவி கங்காளி பாங்கான வேதாளி
மாது பிடாரி வடிவான டாகினியே
பத்திர காளி பரிவாம் ரணகாளி
வீரமா காளி விளங்கும் நடனகாளி
உக்கிரமா காளி உச்சினி மாகாளி
கேட்ட குறிக்குக் கிருபைவைத்துச் சொல்லுமம்மா

சூரியமூர்த்தியை வரவழைத்தல்.

சோதி சொரூபமுள்ள சூரியனே வந்திடுவாய்
ஆயிரஞ் சோதியுள்ள ஆதவனே புண்ணியனே
பானு கதிரவனே பாஸ்கரனே பாக்கியனே
வெய்யோனே யிந்த மேதினிக்கு நல்லோனே
மார்த்தாண்ட பூபதியே மதியே செழுஞ்சுடரே
பகலவனென் றேபேர் படைத்த பரிதியேவா
ஆதித்தனென்று அவனிதனிற் பேரு பெற்றாய்
அந்தரத்திற் றேரோட்டி அருணனென்று வந்துதித்தாய்
ஆசான் மயங்காமல் அன்பாய்க் குறிசொல்லுவாய்

சந்திர மூர்த்தியை வரவழைத்தல்.

சகலதேசத்திற்குஞ் சந்திரனென்றே யுதித்தாய்
அலவன் நிலவென்றும் அல்லோனெனச்செனித்தாய்
சோமனென் றேயிந்தத் தொல்லுலகிற் பேறுபெற்றாய்

சசியோனு யிந்தத் தாணிதனி லுற்பவித்தாய்
மூன்றும் பிறையாய் முளைத்தெழுந்த புண்ணியனே
பூரணச் சந்திரனே பூலோக நாயகமே
மதியாக யிந்த மானிலத்தி லுற்பவித்தாய்
அம்புலி நிலாவென் றவனிதனி லுற்பவித்தாய்
உரோகணியா ளேகலங்க முற்றதொரு சந்திரனே
இச்சமயம் வந்து யெந்தனுக்கு வாக்கருள்வாய்

எசக்கியம்மனை வரவழைத்தல்.

சேரநா டெல்லை திருநெல்வேலி நன்னாடு
சாலைக்கரை யமைந்த சத்தி எசக்கியம்மா
எசக்கியம்மா ளேழுபிள்ளை இடுக்கும் வகைகேளு
வாயிலொரு பிள்ளை மார்பிலொரு பிள்ளையதாம்
கக்கத்தில் ரண்டுபிள்ளை கருத்துடனே தானேந்தி
தோழி லிரண்டுபிள்ளை தூக்கிச் சுமந்துகொண்டு
ஏழுபிள்ளை தன்னை ஏந்தும் எசக்கியம்மா
வீரத்துட னிந்த மேதினியிற் பேருபெற்றாய்
வீதிவழி சுத்தி மெய்விளங்கச் செய்துவைத்தாய்
குறிமுகத்தில் வந்து கொண்டணைத்து யிப்போது
வாக்குக் கொடுத்து வந்தரவு வேணுமம்மா

துர்க்கையம்மனை வரவழைத்தல்.

துர்க்கை விமலை சுந்தரியே அந்தரியே
அம்பரையே தேவி அமரி பராபரையே
பாழைக் கிழத்தி பாப்பாத்தி பத்தினியே
சோலைக் கிளியே துர்க்கையே யென்தாயே
மாலைக் கழுத்தி மஞ்சணை மார்பழகி
குங்குமம் செந்தூரங் குமுகுமென வேசொலிக்கும்
பட்டு பளபளெனும் பாடகக்கால் சோதிமின்னும்
துஷ்டர்களைச் சங்கரித்தாய் சூரர்களை வேரறுத்தாய்
வேள்விகள் செய்த வீரர்களை வெற்றிகொண்டாய்
கேட்ட குறியைக் கிருபைவைத்துச் சொல்லுமம்மா

செல்லாயி அம்மனை வரவழைத்தல்.

வடக்குவாசற் காத்த மாதுசெல் லாயியேநீ

ஈசனுடன் வாதாடி இயல்வரங்கள் பெற்றவளே
சத்தி பராசத்தி சவுந்தரியே வந்திடுவாய்
வாலை திரிபுரையே மனோன்மணியே வந்திடுவாய்
மகுடா சூரன்றனையும் வதைத்துவிட்ட மாதேவி
பிணந்திண்ணும் பேச்சிக்கு பின்றுணையாய் நின்றவளே
பரிவாகப் பன்றிதனைப் பக்கத்தில் காவுகொண்டாய்
மாடாடு ரத்தம் மகிமையுடன் காவுகொண்டாய்
கன்னகையை மறைத்துக் காப்பாற்றி வைத்தவளே
மாயன் சகோதரியே மாதுசெல்லாயி அம்மா
ஆயரை ரெட்சிக்க அன்பாக வந்தவளே
வைத்த குறிக்கு மகிமைகளைச் சொல்லுமம்மா

சப்பரத்தடிக் கருப்பணனை வரவழைத்தல்.

சப்பரத் தடிக்கருப்பே சார்ந்த பெருமானே
முத்தனென்றபேரை முழுதும் படைத்து வந்தாய்
இத்தரணி யோர்களெல்லோரும் போற்றிசெய்ய
முத்தையா வென்று முழுப்பேரும் பெற்றிருந்தாய்
சித்திரா பௌரணையில் சிறந்த அழகனுந்தான்
சப்பரத்திலேறித் தான்வருகும் வேளைகண்டு
தோள்கொடுத்துத் தூக்கித் துரிதமுடன் கொண்டுவரும்
வீர முத்தையா விரும்பி வரவேண்டும்
கருப்பையா இப்போ கருணைவைத்து என்மேலே
குறிமுகத்தில் நின்று குறிப்பாக யிக்குறியை
சொல்லி வரங்கொடுப்பாய் சூரர்களு மெய்த்திடவே

சமையன் சங்கிலிச்சாமியை வரவழைத்தல்.

பார்த்திபனூ ரெல்லைதனிற் பரிவாகவே விளங்கும்
சங்கிலிச் சாமி சமர்த்தா யெழுந்திரியே
இரும்பா லடித்த இயல்பான சங்கிலியை
கழுத்திலே மாட்டி காலுவரை தான்பூட்டி
ஈட்டியுடன் வல்லையமும் இருகையிலுமே பிடித்து
சமையனை முன்னிட்டுத் தானேதெருத் தெருவாய்
சுத்தி வருகையிலே சுடலையும் வந்தேமரிக்க
மரித்த சுடலைக்கு மனமகிழ்வாய்ச் சங்கிலியும்

பூமாலை போடப் பொன் சங்கிலியாச்சு
ஆச்சரியம் பார்த்து அருள்மிகுந்து தானெழுந்து
எல்லைவந்து சேர்ந்து இருந்ததொரு சங்கிலியே
நாட்டுங் குறிக்கு நல்வாக்குத் தந்தருள்வாய் .

இருபத்தோர்பந்தி தெய்வங்களை வரவழைத்தல்.

இருபத்தோர் பந்தியிலும் இராஜாவாய்த் தான்விளங்கும்
கலிதீர்த்த அய்யன் காப்பாற்று மென்பெருமான்
விநாயகன் சுப்பிரமணியன் விரும்புமகா லிங்கமுடன்
இருளப்பன் சப்பாணி இலாடசன் ஞசியரும்
வீரன் கருப்பன் விளங்குகுப்பை யாண்டியய்யன்
ஈரைந்து சாமி இயல்பான தேவதையும்
இருளாயி மாரி இராக்குமுத்துப் பேச்சியுடன்
சத்தகன்னி மாரோடு தான்பதி னென்றேபேரும்
பெண்தே வதையாகும் பேரிருபத் தொன்றாகும்
ஆக இருபத்தோ ரருமையுள்ள தேவதையே
வந்தென் குறிமுகத்தில் வாக்குக் கொடுத்திடுவாய்.

லாடசன்ஞசியை வரவழைத்தல்.

வடதேசந் தான்பிறந்து வங்கதேசம் வளர்ந்து
திருநெல்வேலி நாட்டைச் சேர்ந்த குற்றாலமதில்
மலையுஞ் செடியும் வனமிகுந்த சோலைதனில்
அன்ன ஆகாரங்கள் யாதேனு மில்லாமல்
சந்திரனைச் சூரியனில் தாக்கி மனதிருத்தி
அகார உகாரத்தை யறிந்து மனதுள்ளடக்கி
இருந்தாய் பெருந்தவசு இலாட சன்ஞசியென்று
கெவுனமது பாய்ந்து கிளம்பி வருகையிலே
கலிதீர்த்த அய்யன் கண்டு மிகவணங்கி
இருத்தித் தன்கூட இருக்கவேணு மென்றேதான்
இருபது பேருடனே இருபத்தொன் றாய்ச்சேர்த்து
பந்தி பருமாரி பாங்காக யெல்லோரும்
இருந் ததினாலே இருபத்தோர் பந்தியென்றும்
கூப்பிட் டழைத்தார்கள் குதூகலமா யெல்லோரும்
ஆகையா லிப்போ அடியேன் குறிமுகத்தில்
வந்துகுறி சொல்லி வாக்குத்தர வேணுமையா

வீரணசாமியை வரவழைத்தல்.

பாண்டியன் ராச்சியத்தில் பலவீரர் தான்கூடி
அரசனுக்குக் காணும லனேக விதமாக
கொள்ளையடிப்பதுவுங் கொலைகளவு செய்வதுவும்
பாண்டியன் கண்டு பலபயக்க முண்டாகி
என்னசெய்வோ மென்று ஏங்கி யிருக்கையிலே
வீருக்கு விரோதி வீரணனென் றேயறிந்து
வீரணனை யழைத்து மெய்காவல் போட்டிடவே
போட்டவுடன் வீரணனும் புகழ்வீரரைப் பிடித்து
கழுவிலே போட்டுவிடக் கண்டதொரு பாண்டியனும்
சந்தோஷ மாகிச் சகலருமே தானறிய
வீரணனுக்கு வீரபட்டந் தான் கொடுத்து
காவல் பதனமென்று கார்த்திருக்கச் செய்துவைத்தார்
அன்றுமுதலாய்க் களவு அடங்கினதின் பின்னாலே
வல்லவனும் வீரணனும் வகைமோச மாய்மடிய
கண்டுதான் பாண்டியனுங் காவல் பதனமென்று
வீரணனென்றே பேர் விளங்கவைத்தா ரந்நாளில்
ஆகையா லிப்போது அடிமைக்கு வாக்கருள்வாய்

குப்பையாண்டி அய்யனை வரவழைத்தல்.

திருநெல்வேலி யெல்லை சேர்ந்ததொரு கன்னடியன்
காலாங் கரையோரம் கலிதீர்த்தான் சன்னதிக்குள்
கம்பையைச் சேர்ந்த கனத்தகுப்பை யாண்டி அய்யன்
ஆண்டியென்ற பட்டம் அய்ய னழைத்ததுவாம்
கலிதீர்த்தா னென்று காசினியோர் போற்றுவார்கள்
தெய்வப் பொருளான தீரன்குப்பை யாண்டியையா
தவசுக் குடையவனும் தக்ககுப்பை யாண்டியையா
ஈற்றுக்கா ணிக்கைதனை இயல்பாக வாங்கிடுவாய்
இருபத்தோர் கம்பையிலும் எஜமானாய் நின்றிடுவாய்
வீரர்களை வென்று வெற்றி படைத்திடுவாய்
சூரர்கள் வாராமல் துரத்திவிட்டா யந்நாளில்
மன்னனுந் தானும் வைத்தகுறியைத் தெரிய
குறிமுகத்தில் வந்து குறிப்பிட்டுச் சொல்லிடுவாய்

கலிதீர்த்த அய்யனை வரவழைத்தல்.

தென்னாட் டரசன் சேரனுக்கு அந்நாளில்
குஷ்டரோகச் சீக்கு குபீரென்று வந்ததினால்
அட்ட திசையோரும் அரண்மனையி லுள்ளோரும்
பட்டத் தரசிகளும் பார்த்துக் கிலேசமுற்று
பகவானை வேண்டிப் பார்த்து இருக்கையிலே
பொதிகா சலத்தில் பொருந்தித் தவசிருந்த
சித்த னொருவன் சீராக அங்கு வந்து
அரசனைப் பார்த்து ஆச்சரியமென் றுணர்ந்து
கொடுத்தார் விபூதி குஷ்டரோகந் தீர்ந்துதப்போ
அரச னெழுந்து அன்பா யுபசரித்து
கலிதீர்த்த அய்யனென்று காவலவன் கூறிடவே
ஊரினி லுள்ளோரும் உற்றோர்களு மகிழ்ந்தார்
கன்னடியன் காலின் கரையோர மாகவேதான்
அப்போது அய்யனுக்கு ஆலயமொன்றே யமைத்து
அய்யனைப் போயி ஆங்கிருக்கச் செய்திடவே
கலிதீர்த்த அய்யன் களிப்போடு தானிருந்தாய்
இப்போது வந்து யென்குறிக்கு வாக்கருள்வாய்

வசனம்.

இந்தக்லிதீர்த்த அய்யனை பார்க்கவேண்டுமானால் சேர்மாதேவி ஸ்டேஷனுக்கு வடபுரம் காலாங் கரையோரம் இரண்டு பர்லாங்குக்குள் இருபத் தோர்பந்தி தெய்வத்தோடு செம்புச் சிலையுடன் கலிதீர்த்த அய்யனிருக்கிறார் பார்க்கலாம்

கருக்கு வாலையனை வரவழைத்தல்.

கன்னடியான் காலின் கரைக்கு வடபுரமாய்
இருபத்தோர் பந்தியுடன் இசைவாகச் சேர்ந்திருக்கும்
கருக்கு வாலையன் கருணையுடன் அன்னாளில்
பாரிவேட்டை யாடப் பண்பாய் வருகையிலே
கருமிருக மான காண்டா மிருகமதை
குத்திவதைத்துக் குடல் பிடுங்கி மாலையிட்டு
ஊர்வலமாய்த் தானும் உகந்து வருகையிலே

அரசனுங் கண்டு அகமகிழ் வாகவேதான்
கருக்குவா லையனென்று கனத்தபேர் தான்கொடுத்து
மாலையுஞ் சந்தனமு மகிழ்வாகவே கொடுத்து
கன்னடியன் காலாங் கரையி லிருக்கவைத்தார்
உயர்கருக்கு வாலையா உன்பாதந் தஞ்சமென்றேன்
பாலன்றனக்கு வந்து பண்பாய்க் குறியுரைப்பாய்

வீரபத்திர சுவாமியை வரவழைத்தல்.

தக்கனுட வேள்வி தானழிக்கவே யுதித்த
வீரபத்திரன் உக்கிரன் வீரன்மகன் சிதைத்தோன்
பத்திரை கேள்வன் பரிவான நற்சடையோன்
செக்கர் நிரத்தன் தீரன்வேள்வி யழித்தோன்
அழற்கண் பெரியோன் அனந்தவித நாமமுள்ளான்
உன்சொரூபந் தன்னை உற்றுமே பார்த்தோர்க்கு
பயங்கரம தாகப் பண்பாகவே தோற்றும்
ஆகையா லிப்போ அடியேன் மனமகிழ
சிற்சொரூபங் காட்டி சீர்பெறவே வந்திடுவாய்
பாலன் வடிவாகப் பக்குவமா யிப்போது
சேயன் குறிக்குத் தீரமுடன் தானெழுந்து
வந்து யிப்போது வாக்குக் கொடுத்தருள்வாய்

கருப்பண சுவாமிகளை வரவழைத்தல்.

பூமியெங்குங் கீர்த்திபெற்ற பூமாலை கருப்பையாவா
இரட்டைமலைக் கருப்பா இப்போது வந்திடுவாய்
மருதங்குடிக் கருப்பா மகிழ்வாக வாக்கருள்வாய்
சப்பரத்தடிக் கருப்பா சதிராக வந்திடுவாய்
பாஷை பதினெட்டாம் படிக்கருப்பா வந்திடுவாய்
பேருபெற் றோங்கும் பெரிய கருப்பையாவா
செல்வங்கள் தந்தருளும் சின்னக் கருப்பையாவா
மரவருட நாடு மார்நாட்டுப் பொன்கருப்பா
சதுரகிரி யடியிற் றுணிப்பாறைக் கருப்பா
மாவூற் றருகில் வளர்கருப்பா வந்திடுவாய்
பலாவடிக் கருப்பா பட்சமுடன் வந்திடுவாய்
பிரங்கு முனது பெயர்சொன்ன னுங்காகங்

கரந்த பாலுண்ணுக் கருப்பையா வந்திடுவாய்
குறிமுகத்தில் நின்று குறிப்பறிந்து சொல்லிடுவாய்

ஆண்டிச்சாமியை வரவழைத்தல்.

ஆண்டியப்பா உந்த னடைக்கலங்கா ணிப்போது
பிச்சாண்டி யென்று பிரபலமாய்ப் பேருபெற்ருய்
முனியாண்டி அய்யா முக்கியமாய் வந்திடுவாய்
மூன்றுந் தலமாம் மொட்டையுள்ள கோபுரமாம்
கோபுரத்தைக் காத்த கூறுமுனி யாண்டியேவா
மூசுண்ட கிரியில் முழங்குகின்ற ஆண்டியேவா
வேண்டிய வரந்தரும் வெள்ளையாண்டி அய்யாவா
கோரும் வரங்கொடுக்கும் குப்பையாண்டி அய்யாவா
பாண்டி முனியாண்டி பச்சமுடன் வாவாவா
மலையாண்டி அய்யா வரவேணு மித்தருணம்

மாடசாமியை வரவழைத்தல்.

இலைதுலுங்கா நேரம் இரணகளப் பூமியிலே
அருந்தவசு செய்த அக்கினி மாடனேவா
சுடுகாட் டிருக்குஞ் சுடலைமுத்துச் சாமியேவா
புதைகுளிக் குள்ளிருக்கும் பூக்குடலை தான் தூக்கும்
பெரியதொரு மாடனே நீ பேணியிங்கு வந்திடுவாய்
தொட்டால் விடாத சுடலைமாட சாமியேவா
தேவருதவி பெற்ற சின்னமாட சாமியேவா
அண்டர்க்குதவி செய்த ஆகாசத் தெய்வமேவா
சர்வலோ காதிபனுஞ் சங்கிலி மாடனேவா
வைத்த குறிக்கு வந்துதவி செய்திடுவாய்

வீரனை வரவழைத்தல்.

மூவுலக முப்புகழும் முத்து வீரன்வாவா
மாதேவரும் போற்றும் வல்லவீரன் வாவாவா
நாட்டுக் கதிகாரன் நல்வீரன் வாவாவா
சங்கிலி வீரன் தவசிவீரன் வாவாவா
பெரிய வீரா நீ பேணியிங்கு வந்திடுவாய்
சொத்தைவீரா பெரிய சுடலைவீரா வாவாவா
செங்கைதனைக் காத்த செல்வவீரா வாவாவா
அக்கினி வீரா அருள்பெருகு மாவீரா

உக்கிர வீரா உயர்வான மாவீரா
இத்தருணம் வந்து யென்குறிக்கு வாக்கருள்வாய்

முத்தனை வரவழைத்தல்.

முத்தன் மூத்தனென்று முன்னோர் பூசித்துவந்த
சோனைமுத்து வந்து சுகந்தரவும் வேணுமையா
தவசிமுத்தன் பெரிய சங்கிலி முத்தையாவா
சுடலைமுத்தன் முன்வளர்த்த சோதிமுத்த னும்வாவா
பேரான முத்தன் பெரியமுத்தா வந்திடுவாய்
சீரான முத்தா சின்னமுத்தா வந்திடுவாய்
ஓங்கார முத்தன் உக்கிரமுத்தா வந்திடுவாய்
பாக்கியங்கள் தந்த பலாவடி முத்தையாவா
வீரமுத்து யிப்போ வேண்டும் வரம் தந்தருள்வாய்
நல்லமுத்த னென்னும் ஞானமுத்தா வந்திடுவாய்
மாசான முத்தா வந்திடுவா யிப்போது
குறிமுகத்தில் நின்று கூறுவா யிக்குறியை

ஆண் தேவதைகளுக்கு வர்ணித்து வரவழைத்தல்.

தெய்வப் பொருளே தேவே சடாச்சரமே
புலியாம் புலித்தோலாம் புள்ளிமா னாசனமாம்
தலையில் மகுடந் தளதளென வேசொலிக்க
உக்கிர முகமும் உகந்தொரு பார்வைகளும்
வாகான காதில் வயிரக் கடுக்கனிட்டு
கழுத்தினிலே தாவடங்கள் கனகமய மாய்விளங்க
மார்பினிற் பூணூலும் வகையாக வேதுலங்க
கைநிறைய மோதிரங்கள் கலகலென வேசொலிக்க
பட்டு வஸ்திரங்கள் பாதம்வரை தான்துலங்க
இடையி லரைஞா லிருபுரமும் மின்னலிட
தோளிலே தானுந் துட்டுத்தடி யிலங்க
ஒருகையில் வல்லயமும் ஒருகையில் வீச்சரிவாள்
பாதக் குறடும் பரிவான காலிலங்க
தெய்வ வுருக்காட்டி சிறுபிராய மாவாய் நீ
பார்த்தோர் மயங்கப் பன்றியுருக் கொண்டிடுவாய்
பூனை வடிவாகிப் புதுமைகளைக் காட்டிடுவாய்
பரிமேலே யேறிப் பவனிவலம் வந்திடுவாய்
யானைமே லேறி அரசாட்சி செய்திடுவாய்

ஆகாசம் பூமிவரை யாளாக நின்றிடுவாய்
பூதகணம் போலே பூரித்துக் காட்டிடுவாய்
ஈரசந்தி வேளை இருள்கவிந்த நேரமதில்
இலைதுலுங்கா நேரம் இருசாம மத்தியிலே
நஞ்சுதின்று நஞ்சிரக்கும் நடுச்சாம நேரமதில்
சோற்று மயக்கம் தூங்குமந்த நேரமதில்
சுடலை தனிலே சூழும் பிசாசுடனே
தவசை நிறைவேற்றி தவஞ்செய்த மாவீரா
காத்தொட்டி வத்தலுக்குங் காஞ்சிரம் பழங்களுக்கும்
வனத்திலே வந்து வல்லரக்கரைத் தொலைத்தாய்
பாலனைக் காப்பாற்ற பட்சமுடன் வந்திடுவாய்
எல்லையை விட்டு இப்போது வந்திடுவாய்
வைத்த குறிக்கு வந்துசொல்வா யிப்போது

இதன் கருத்துரை.

இதிற் கண்ட யெந்த ஆண் தேவதையை வர்ணிக்க வேண்டுமோ அந்த ஆண் தேவதையின் பெயரை முதலில் வர்ணித்துக் கொண்டு அப்பா லிதனை வர்ணிக்க அருள் வெகு மூறுக்கா யிறங்கிக் குறிசொல்லும்.

வன்னிய சாமியை வரவழைத்தல்.

மாவருட நாடு மகாநாடு பொன்னுடு
தேவர்கள் நாடு சிவகெங்கை மாநாடு
தெய்வேந்திர குலத்தில் சிறப்பாக வந்துதித்த
முத்து வீராயி மூன்மகனுய்ப் பெற்றெடுத்த
மரத்தி மகனே வன்னியனே வந்திடுவாய்
வில்வீரர் தன்னை வெற்றிகொண்ட வன்னியனே
குழந்தை மயங்காமல் குருவாகவே யிருந்து
வைத்த குறிக்கு வகைசொல்வா யிப்போது

அரி ஸ்ரீ ராமா ராமா.

அயோத்திவாழ் ராமா அருள்சேர் பரந்தாமா
கோதண்ட ராமா கோசலை ராமாவா
ஜானகிராமா தசரத ராமா பெரிய
சீதாபி ராமா திருவேங்கட ராமா
செயராம ராமா சிவராமா ஸ்ரீராமா

பட்டாபி ராமா பலபத்திர ராமாவா
அரிராமா ராமா அச்சுதனே வந்திடுவாய்

இதுசமயம் அறிவு மயங்கிக் குறிசொல்லுதல்.

அப்பா மயங்காதே அடியேனும் வந்துவிட்டேன்
கூப்பிட்ட சத்தங் கொடுமுடிக்குக் கேட்டுவந்தேன்
அழைத்ததொரு சத்தம் அடைவாகக் கேட்டுவந்தேன்
நினைத்ததொரு காரியத்தை நிமிஷத்திற் சொல்லுகிறேன்
மயங்காதே யிப்போ மனவருத்தந் தீர்க்குகிறேன்
சொல்லுங் குறியின் துகைவிபரம் நீகேட்டாய்
கேட்ட குறியைக் கிருபையுடன் சொல்லுகிறேன்
வைத்த குறியின் வகைவிபரங் கேளாசான்

கோவிந்தா அரி கோவிந்தா

சித்தந் தெளியச் செப்புவேன் தீர்மானம்
மனதிலொன்று மெண்ணாதே வைத்த குறிதானும்
இல்லிடம் பூமி இருப்பாகு மத்தலத்தில்
சீவன் றிடமுறுதி சேர்ந்தமனை க்ஷேத்திரத்தில்
மானிட ஜீவன் மக்களுண்டே என்னுசான்
ஆணென்றும் பெண்ணென்றும் அதிலே யிருவகையாம்
இருவகையி லேதா னிருக்குங் குழந்தைகளாம்
மாடாகுஞ் சீவன் வழியோடே நான்காகும்
ஆடாகுஞ் சீவ னதிலேதான் நான்காகும்
நஞ்சை புஞ்சையோடு நல்லநிலம் ரெண்டாகும்
இன்னொஞ் சொன்ன திதுவிவரந் தோணலையா
சொன்ன குறிகள் தோணுமற் போச்சுதோ சொல்

இதன் கருத்துரை.

இந்த யிடத்தில் குறிவெளியாய்விடும் அப்படி வெளியாகாத விஷயத்தில் திருப்பியும் இதையே சொல்லிக் குறியை வெளியாக்கிக் கொள்ள வேண்டியது.

அரசியென்ற பெண்ணுனல், வாட்டங்களைப் பற்றிச் சொல்லுதல்.

பெண்ணென்று சொல்லிப் பேசினது கண்டாயா
மாது நல்லாளுக்கு வாட்டமது கண்டேனுன்
என்ன வாட்டமென்று இயம்புகிறேன் கேளாசான்
வீட்டைவிட்டுச் சென்று வெகுவாய் வருகையிலே

கருப்புகள் கண்ட கலக்கமது உண்டாச்சான்
பெருகா லத்தில் பெருங்கஷ்ட மானதுவும்
கனவுகள் கண்டு கலங்கி மலைத்ததுவும்
கலியாண மான காரியத்தி லேதானும்
களவு நடந்த காரியமுஞ் சொல்லுகிறேன்
வீட்டில் கலகம் வெறும் பேச்சினாற் கலகம்
அத்தக் கனவும் அதிரடியுஞ் சொற்பனமும்
சீக்குகளால வாட்டம் சிறந்த பொருள் சேதம்
தீய்க்கோளா லேதான் திரமாங் கவலை களாம்
பெரும்பாடு கண்டு பெருத்த வியாதியுடன்
மன்னனா லேதான் மனவருத்தங் கண்டதுவும்
பெண்ணாலே வந்த பெருங்கவலை பார்த்ததுவும்
குழந்தைகளாற் சேதம் கூடும் பொருள் சேதம்
மருமக்க ளாலே மனக்கவலையும் வாட்டம்
பங்காளி செய்யும் படுங்கவலை கண்டேனான்
கன்னங் களவு கனமோசத் தாற்கவலை
பேர்கால யாகாத பெருங்கவலையும் வாட்டம்
பில்லிநல்ல சூனியத்தால் பெருங்கவலை பார்த்ததுண்டு
காணக் கடியாய்க் கடித்ததினால் வாட்டமுண்டு
குழந்தை யில்லையென்ற கோறிக்கையும் வாட்டம்
ஆடுமா டாலே அவதிவந்ததும் வாட்டம்
தூரத் தொருவன்செய் சூனியமும் பார்த்தேனான்
வாட்டங்கவலை மனவருத்தங் கண்டேனான்
நாட்டுப் பிணிபோல் நற்சிக்கையு மறிந்தேன்
ஏதினால் வந்ததென்று என்னைவந்து கேட்டாய்நீ

இதன் கருத்துரை.

பெண்தானெனில் இவைகளைச் சொல்லி வெளியாக்கிக் கொண்டு இதன் முதற்பாகத்தில் இந்த விஷயங்கள் யாவும் விரித்துச் சொல்லியபடி குறியை முடித்து விபூதி கொடுத்தனுப்ப வேண்டியது.

அரசனென்ற ஆணால் வாட்டங்களைப் பற்றிச் சொல்லுதல்.

சீரான மன்னனென்று செப்பினது கண்டாயா
மன்னனுக்கு நேர்ந்த வருத்தங்கள் கண்டேனான்

ஆசான் பயந்த ததுவிபரமும் பார்த்தேன்
பெண்ணால் நடந்த பெருங்கஷ்டமு மறிந்தேன்
சீக்கினால் கஷ்டந் தெரிந்தது எந்தனுக்கு
மனையாளால் நேர்ந்த வருத்தங்களும் பார்த்தேன்
நகைசெய்து பார்க்க நலமாய் மனதில் வைத்தேன்
துலைதூரஞ் சென்றுவரத் தொந்தமுட நினைத்தேன்
வியாபாரஞ் செய்ய விரும்பினதை யுப்பார்த்தேன்
உற்றமனை யாளோ டுறவாகவும் பார்த்தேன்
மக்கள் கலியாணம் மகிழ்வாகப் பார்க்க வந்தேன்
ஓடினதோர் பெண்ணை உற்றழைக்கக் கண்டேனான்
போனபொருளைப் போய்ப்பிடிக்க வும்பார்த்தேன்
கடன்வாங்கி மேல் நடத்தக் காரியமுங் கண்டேனான்
கடன்கார ரிம்சை கண்டுநான் பார்த்து வந்தேன்
கோர்ட்டுப் பிராது குறிப்பதனையும் பார்த்தேன்
சாமி பிரார்த்தனைகள் தான்செய்யவும் நினைத்தேன்
செல்வன் றனைப்படிக்கச் செய்யலா மென்று வந்தேன்
குழந்தை பயந்த கொடுமைகளும் நானறிந்தேன்
மாடாடு வாங்கி மகிழ்ந்திருக்கவும் நினைத்தேன்
வீடுகட்டிப் பார்க்க வினையமதைக் கண்டேனான்
நஞ்சை புஞ்சை கண்டு நாடினதையும் பார்த்தேன்
சொற்பனத்தாற் கண்ட சோரங்களும் பார்த்தேன்
வந்ததென்ன வென்று வகைகேட்டா யென்னாசான்

இதன் கருத்துரை.

அரசனென்ற ஆணால் இதுகளைச் சொல்லிக் குறியை வெளியாக்கிக் கொண்டு இதன் முதற் பாகத்தில் சொல்லி யிருக்கிறபடி அவைகளை விரித்துச் சொல்லிக் குறியை முடித்து ஆரக்கட்டி விபூதிகொடுத்தனுப்பவேண்டியது.

குடியிருக்கும் வீடானால்.

மனை வீடுதானென்று வருந்தினதுந் தோணலையா
இல்லடம் பூமி யிருப்பாகு மத்தலத்தில்
வீடுமனைவாசல் மிகுதி யுண்டு என்னாசான்
மனையில் நுழைந்து வருதிகளையும் பார்த்தேன்
வாசலில் நின்று வகைவிபரமுந் தெரிந்தேன்
வீட்டுக்குள் சென்று விரும்பியங்கு நான்பார்த்தேன்

கோளாரு கண்டேன் குடித்தனமும் நான் பார்த்தேன்
வீடுகட்டிப் பார்க்க வெகுவாய் மனதில் வைத்தேன்
வேறுகுடி யிருப்பை வேணுமென்று நானினைத்தேன்
நச்சுக் கெவுளியினால் நான்சோதனை பார்த்தேன்
கபடமாய்ச் செய்த கடுஞ் சூனியம் பார்த்தேன்
இந்தவிபரங் கேட்க என்னிடத்தில் வந்தாய் நீ

இதன் கருத்துரை.

குடியிருக்கும் வீடானால் இவைகளைச் சொல்லிக் குறியை வெளியாக்கிக் கொண்டு இதன் முதற்பாகத்தில் சொல்லியிருக்கிறபடி அவைகளைச் சொல்லிக் குறியை முடித்து திசை கட்டி விபூதி கொடுத்தனுப்ப வேண்டியது.

நஞ்சை புஞ்சை யானால்.

நிலம்பூமியென்று நேர்மை சொன்னேன் முன்னாக
பூமி நிலங்களையும் போய்ப்பார்த்தே னிப்போது
நிலங்கள் முழுதும் நேர்மையுடன் நான்பார்த்தேன்
சர்ப்பமுங் கண்டேன் சரியான ஆமைகண்டேன்
நஞ்சைச்குப் போனேன் நல்லபயிரைப் பார்த்தேன்
புஞ்சைக்குப் போனேன் புகழ்தானியம் பார்த்தேன்
தோட்டங்கள் கண்டேன் சுகமான காய்கள்கண்டேன்
பூந்தோட்டம் போனேன் புஷ்பங்கள் தானெடுத்தேன்
கிணறுகள் வெட்டிக் கீழ் நீரையும் பார்த்தேன்
நஞ்சைபுஞ்சை விற்று நலமாக வாங்கிடவும்
நல்லவிபரம் நாம் கேழ்ப்போமென்று வந்தாய்

இதன் கருத்துரை

நஞ்சை புஞ்சை தோட்டமானால் இவைகளைச் சொல்லி குறியினைத் தெரிந்துகொண்டு இதன் முதற்பாகத்தில் சொல்லியிருக்கிறபடி அவைகளை விரித்துச் சொல்லி குறியை முடித்து ஆக்கட்டி விபூகிகொடுத்தனுப்ப வேண்டியது.

மாடு ஆடுகளானல்.

மாடாடு சீவனென்று வாக்குரைத்தே னிப்போது
பசுவென்றுங் காளை யென்றுங் பாங்கா யிரண்டுவகை
எருமை யென்றுங் கிடாவென்றும் இதிலேயிரண்டுவகை
செம்புலியாடு சிறந்த கிடாய் ரெண்டாகும்
வெள்ளாட்டினோடே மிகுந்த கிடாய் ரெண்டாகும்

பசுவுகளைப் பார்த்து பால் குடிககவும் நினைத்தேன்
காளைமா டென்ற கருத்துகளும் நானறிந்தேன்
எருமைகள் தன்னை ஏறிட்டுப் பார்த்தேனுன்
கிடாமாடு வந்து கிடப்பதையுங் கண்டேனுன்
வெள்ளாடும் பாலும் வேண்டிய கிடாய்களுடன்
செம்புலியாடும் சிறந்த கிடாய் களையும்
சகலமும் பார்த்தேன் சந்தோஷங் கொண்டேனுன்
மாடாடு விற்று வாங்குதற்கு நேர்ந்ததையும்
பார்த்து மகிழ்ந்தேன் பக்குவமும் பார்த்தேனுன்
இந்தக் குறிகேட்க இயல்பாக யிங்கு வந்தாய்

இதன் கருத்துரை.

மாடாடுகளானுல் இவைகளைச் சொல்லி குறியின் முடிவைத் தெரிந்து கொண்டு இதன் முதற் பாகத்தில் சொல்லியிருக்கிறபடி அவைகளை சொல்லிக் குறியை முடித்து ஆரக்கட்டி விபூதி கொடுத்து அனுப்ப வேண்டியது.

வீட்டுச் சாமான்களானுல்.

வீட்டுச் சாமானெனவே விளம்பினேன் முன்னுக
பானைசட்டியோடு பாத்திரம் பலகை முதல்
கூடை பெட்டி தானியமும் கூறுகின்ற நெல்லுகளும்
தானியங்களோடு தங்க நகை களுந்தான்
பொன் வெள்ளி ரூபாய்கள் புதிதான சேலைகளும்
வேஷ்டி வகையும் விரும்பும் அரிசி வகை
பலசரக்குச் சாமானும் பார்த்துவந்தே னென்னுசான்

பயிர் தானியமானுல்.

பயிர் தானிய மென்று பகர்ந்ததுவும் கேட்கிலையா
செவல்கரிசல் பூமிகளிற் சீராய் விளைந்துவந்த
மொச்சை துவரைஎள்ளு முழுஉளுந் துப்பயரும்
பாசிப்பயர் கடலை பச்சை தட்டைப்பயரும்
சிறுபய ரோடு சிறந்த காணப் பயரும்
கல்லுப் பயரும் காரா மணிப்பயரும்
கொடிசெடியுங் கண்டு கூராகப் பார்த்து வந்தேன்
அதிலையு மோசம் அன்பாகக் கண்டேனுன்

குதிரை முதலான மிருகங்களானுல்.

அழகமலை நாதன் அன்பாய்ச் சவ்வாரி செய்யும்

குதிரையைப் பார்த்துக் குதூகலமுங் கொண்டேநான்
புலிகரடி வேங்கை பூனைகளும் மான்மறையும்
மதங்கொண்ட யானை வரிவேங்கை யும்பார்த்தேன்
வேட்டைகளாடாமல் மிகவேதான் விட்டுவிட்டேன்

பறவை பட்சிகளானல்.

கோழி யென்றுஞ் சேவலென்றுங் கூறும் புருவெனவும்
மயில் கருடனென்றும் வாகான அன்னமென்றும்
காடைகவு தாரியென்றும் கரிக்குருவி அன்றிலென்றும்
கழுகு பருந்தென்றும் கருநாரை ஆந்தை யென்றும்
பச்சைக்கிளி யென்றும் பகர்வானம் பாடியென்றும்
தயிலாங் குருவியென்றும் சார்ந்த பூஞ்சிட்டு வென்றும்
இன்னும் பலபறவை இயல்பாகக் கண்டேனன்

ஊர்வன சாதிகளானல்.

பல்லியொடு பூரான் பாம்பு கெவுளியுடன்
தேள் நட்டுவக்காலி சேர்ந்தவொரு செய்யானும்
அரணை பாம்புராணி அடைவான மூஞ்சுருடன்
மரவட்டை அட்டை வாய்த்த மண்டலப் பூச்சி
பத்துக்கால் பூச்சி பவளச் சிலந்திப் பூச்சி
எலி பெருச்சாளி இயல்பான பாம்புகளும்
ஊர்ந்து திரிவதையும் உற்றுணர்ந்து பார்த்தேநான்

நீர் வாழுஞ் சாதிகளானல்

சங்கு சிப்பி நண்டுடனே தவளையுடன் அட்டை
மீன்வகைகள் கோடி மிகவேதான் பார்த்து வந்தேன்
ஆமையுடன் ருனும் அடைவாமுதலை கண்டேன்
தண்ணீருப் பாம்பு தான் கண்டேனிப்போது
நீர்க்கோழி கண்டேன் நீர்ச்சாரையும் பார்த்தேன்
இன்னு மனேக மிருக்கிறதையும் பார்த்தேன்
நீர்வாழுஞ் சாதி நிலமை யறிந்தேனன்

இதன் கருத்துரை.

இவைகளின் குறி வெளியாகாமல் மயங்கினுல் முத்துக் குறி போட்டுப் பன்னிரண்டு ராசியைப் பிடித்து லெக்கனத்தைத் தெரிந்து கொண்டு அதிற் சொல்லியபடி குறியை வெளியாக்கி விபூதிகொடுத்தனுப்ப வேண்டியது.

உ

உதயகிரி நாதர் துணை.

## கோடாங்கி மாலை

# முத்துக்குறி சாஸ்திரம்.

இந்தப் 12 ராசி முத்துக் குறியானது சுமார் 10-வருடத்திற்கு முன் கோசுகுண்டு ஒன்பதுகம்பளஞ் சக்கம்மா தேவி கோவில் பூசாரி முத்துவீரப்ப நாயக்கரவர்களிடமிருந்து ஓலைச்சுவடியை வாங்கி அச்சிட ஆரம்பிக்கும் போது கோடாங்கிக்காரர் வெகு பேர்கள் வந்து இந்த முத்துக்குறி சாஸ்திரத்தை பின்னீடு அச்சிடலாமென்று நிறுத்தி விட்டார்கள் அப்பால் கோடாங்கி மாலை முதற் பாகம் வாங்கினவர்களெல்லாம் முத்துகுறியில்லாமல் சரியாய் வரவில்லையென்று கேட்டுக் கொண்டதற்காக இந்த முத்துக்குறியை இத்துடன் சேர்த்து அச்சிடலானது.

பன்னிரண்டு ராசி முத்துக்குறி விபரம் வசனம்.

தாமரை முத்து பன்னிரண்டெடுத்து அதில் ஒரு முத்துக்கு மட்டும் வெள்ளி அல்லது தங்கத்தினால் கவசமிட்டு ஒரு பைக்குள் போட்டு வைத்துக் கொள்ள வேண்டியது குறி திகையாமலிருந்தால் உடுக்கைக்கட்டி வைக்கிற கம்பிளியை விரித்து நவக்கிரக தேவதையைக் கையெடுத்துக் கும்பிட்டு அதன்மேல் இந்த 12 முத்தையும் கையிலடக்கிக் கொண்டு முத்துகளைக் கொஞ்சங் கொஞ்சமாய் கம்பிளியில் விட்டுவர கவசமிட்ட முத்து கையை விட்டு விழுந்துவிட்டால் கையிலிருக்கிற முத்துஞ் சேர்த்து எத்தனை முத்திருக்கோ அதை எண்ணிக் கொண்டு அதுவே லெக்கனமாகக் கொண்டு பலனைச் சொல்லவும்.

லெக்கன மறிய.

கவசமிட்ட ஒரு முத்துமட்டும் விழுந்தால் மேஷ மாகும் இரண்டு முத்து விழுந்தால் ரிஷப லெக்கனமாகும் மூன்று முத்து விழுந்தால் மிதுன லெக்கனமாகும் நான்கு முத்து விழுந்தால் கடக லெக்கன மாகும் ஐந்து முத்து விழுந்தால் சிம்ம லெக்கன மாகும் ஆறு முத்து விழுந் தால் கன்னி லெக்கனமாகும் ஏழு முத்து விழுந்தால் துலா லெக்கன மாகும் எட்டு முத்து விழுந்தால் விருச்சிக லெக்கன மாகும் ஒன்பது முத்து விழுந்தால் தனுசு லெக்கன மாகும் பத்து முத்து விழுந்தால் மகர லெக்கன மாகும் பதினொன்று முத்து விழுந்தால் கும்ப லெக்கன மாகும் பன்னிரண்டு முத்து விழுந்தால் மீன லெக்கன மாகும். இதில் ஒத்தைப்பட விழுந்தால் வழி விடும் இரட்டைப்பட விழுந்தால் கட்டும்.

இதன் கருத்தன்ற.

ஒத்தைபட விழுகும் பட்சத்தில் காரியம் அனுகூல மாகும் இரட்டைப்பட விழுகும் பட்சத்தில் காரியம் பிரிதி கூலமாகும் இவைகளை யெல்லாம் அனுசரித்துப் பார்த் துக் கொள்ளவும்.

மேஷ ராசி யானல்.

மேஷம் ஆடு பட்டி சேர்க்குதல் அல்லது விற்று விடுதல் பால் பாக்கியம் விரும்பல் சோரம் துன்பம் சீக்கு களவு கிடைப் பொங்கல் கிடாய் வெட்டுதல் கோர்ட்டு வழக்கு கலியாணம் வியாபாரம் சீவனைக் கோறியது ஆண் பெண் மாடு ஆடு நஞ்சை புஞ்சை இவையாவும் மேஷ ராசிகளாகும்.

ரிஷப ராசி யானல்.

ரிஷபம் மாடு நாலுகாற் சீவன் பட்டி சேர்க்குதல் கொடுத்தல் பாலவிருத்தி களவு கன்னம் சோரம் சீக்கு கலியாணம் பயம் சீவன் தெய்வ சிந்தனை மனைவீடு ஆண் பெண் மாடு ஆடு நஞ்சை புஞ்சை இவையாவும் ரிஷப ராசியாகும்.

மிதுன ராசி யானல்.

மிதுன மென்பது ஜோடி பெண் மயக்குதல் பணம் பரித்தல் விவாகஞ் செய்து கொள்ளல் மருந்திடு செய்தல் மோசம் கெடுதி கோள் துன்பம் துயரம் வழக்கு வம்பு பிசகு பேதகம் கன்னங் களவு ஏமாற்றுதல் ஏய்க்குதல் சீவன் இவைகள் யாவும் மிதுன ராசியாகும்.

கடக ராசி யானல்.

கடகமென்பது நண்டு எட்டுக்காற்சீவன் நீர்ப்பெருக்கு கண்மாய் கிணறு சமுத்திரம் குளம் நஞ்சை நெல்ப் பயிர் சோளம் வரகு கம்பு தானியம் கிழங்கு காய்கரி பயறு கொடிக்கால் வாழை தென்னை பனை இவையாவும் கடக ராசிகளாகும்.

சிங்க ராசி யானல்

சிங்க மென்பது ஆண் சிங்கம் மானிடன் வியாபாரம் கலியாணம் குழந்தை வியாதி கடன் வாங்கல் கொடுக்கல் கன்னம் களவு பில்லி சூனியம் துருசுப்பேய் ஆபரணம் விஷம் கோர்ட்டுப் பிராது தெய்வம் அசலூர் போகுதல் மனை வீடு வாங்கல் விற்றல் கட்டுதல் குடி புகுதல் நிலம்வாங்கல் கொடுக்கல் இவை யாவுஞ் சிங்க ராசியாம்.

கன்னி ராசி யானல்.

கன்னியென்பது பெண் விவாகம் குழந்தை பேருகாலம் சேலை ஆபரணம் கன்னம் களவு சோரம் சிக்கு தெய்வம் சீவன் சண்டை கருப்பு வீட்டு விலக்கம் மன அழுக்கு கனவு தூரம்போனதைக் குறித்தல் கடன் வாங்குதல் கொடுக்குதல் இம்சை இடம் விட்டு இடம்போதல் மனை வீடு நஞ்சை புஞ்சை வாங்குதல் கொடுத்தல் மாலை சந்தனம் சீவன் இவை யாவுங் கன்னி ராசி யாகும்.

துலாம் ராசி யானல்.

துலாமென்பது திராசு நிறை செட்டி பூணூல் போட்டவன் வர்த்தகம் வியாபாரம் கடன் கொடுக்கல் வாங்குதல் உப்பு புளி மிளகாய்ச் சாமான் சீட்டு போடுதல் வெற்றிலை பாக்கு பாத்திரம் பண்டம் திடம் உறுதி மாடு ஆடு ஆண் பெண் இவையாவும் துலாம் ராசியாகும்.

விருச்சிக ராசியானல்.

விருச்சிகமென்பது தேள் விஷந் தங்கியது பாம்பு முதலான விஷஜெந்துகள் கவலை துன்பம் துயரம் களவு கன்னம் பில்லி சூனியம் பயம் கருப்புக் கண்டது வியாதி இம்சை கைவிட்டுப்போன பொருள் பேய் பிடித்தாட்டல் சொற்பனம் நச்சுக்கெவுளி அக்கினி சண்டை பயிர் நோவு பால் மங்களம் சீவன் இவையாவும் விருச்சிக ராசியாகும்.

தனுசு ராசி யானல்.

தனுசென்பது வில் வில்லுக் குடையவன் அரசன் மறையோன் வித்தையைக் கற்றுவைத்தல் உத்தியோகம் பார்த்தல் தானம் ஏற்றுக்கொள்ளல் பூணூலிடல் விவாக முடித்தல் திவசங் கொடுத்தல் கருமகிரிகை செய்தல் எழுதுதல் வண்டிமாடு குதிரை வைத்தல் வாகன மேறுதல் ஆரபணம் பூணுதல் கலியாணஞ் செய்வித்தல் சுபகாரியங்கள் சந்தனம் பூசுதல் இவையாவுந்தனுசுராசியாகும்.

மகர ராசி யானல்.

மகரமென்பது சமுத்திர மீன் நீர்வாழுஞ் சாதி கண்மாய் குளம் கிணறு வாய்க்கால் ஆறு சமுத்திரம் கப்பல் படகு ஏற்றுமதி துறைமுகம் முத்துச்சிப்பி சங்கு மீன்தண்ணீர் செம்படவன் மழை சீவன் திடம் உறுதி விவாஹம் குழந்தை வேண்டுதல் பேருகாலமாதல் இவை யாவும் மகர ராசியாகும்.

கும்ப ராசி யானல்.

கும்பமென்பது குடம் கவசம் வட்டவடிவம் பாத்திரம் பண்டம் வீட்டிலுள்ள சாமான்கள் சேலை வேஷ்டி துணி ஆபரணம் பெட்டி பேழை பூட்டு திறப்பு அடுப்பு பானை சட்டி சாதம் கறி ஆயுதம் விறகு மலையிலுள்ள சாமான்கள் மிருக ஜெந்துக்கள் புழு பூச்சி மாடு ஆடு குதிரை செங்கல் கருங்கல் இவையாவும் கும்பராசியாகும்.

மீன ராசி யானல்.

மீனமென்பது மச்சம் தண்ணீர் மாமிசம் ஏரி குளம் கூபம் ஆறு நிஞ்சை புஞ்சை நெற்பயிர் காட்டுத் தான்யம் மரம் கம்பு பலகை சமுத்திரம் கப்பல் வத்தை பட்டு

மழை மீன் மூத்து சிப்பி சங்கு யாடு ஆடு மன வருத்தம் கவலை துன்பம் கடன் கோர்ட்டுப் பிராது நண்டு நத்தை தவளை இவை யாவும் மீன ராசி யாகும்.

இதன் கருத்துரை.

இந்தப் பன்னிரண்டு ராசி லெக்கனத்தி லுள்ள அம்சங்களால் யெப்பேர்ப்பட்ட குறிகளும் வெளியாகும் அதில் எந்த விஷயங்களை குறிப்பிட்டார்களோ வென்பதை யறிந்து கொண்டு அந்த விஷயங்க ளெல்லாம் கோடாங்கி மாலை முதற் பாகத்தில் விரித்துச் சொல்லி யிருக்கிறது அதை ஞாபகத்தில் வைத்து அந்தப் பாகத்தை யெடுத்து விரித்துச் சொல்லிக் குறியை முடித்துத் தீர்மானஞ் சொல்லி ஆரக்கட்டி விபூதி கொடுத்தனுப்ப வேண்டியது.

கிணறு வெட்டுவதற்குச் சொல்லுதல் வர்ணிப்பு.

இல்லடம் பூமி இருப்பாகும் நல்மனைக்கு
நஞ்சை புஞ்சை தன்னில் நலமாய்க் கிணறு வெட்டி
தண்ணீரைப் பார்க்கத் தான்வந்தா யிப்போது
நினைத்தபடி தண்ணீர் நேர்மையுடன் வேணுமென்றால்
சொன்னபடி செய்தால் சுகமான தண்ணீரும்
கண்ணாலே பார்க்கலாம் கருத்துவைத்து நீகேளு
நம்முடைய நிலத்தை நன்றாக நான் பார்த்தேன்
நிலத்தின் கிழக்கே நேர்மையுள்ள யீசானம்
மூலையிலே கிணறு முடிவாக வெட்டிடுவாய்
வேணதோரு தண்ணீர் வெகுவாக வந்துவிடும்
அல்லது நீங்க ளன்பாகவே குறித்த
இடத்திலுந் தண்ணீ ரிருக்கிறதையும் பார்த்தேன்
பெருத்தமடையாய் நீர் பேராகத் தானூறும்

மழையைப் பற்றிச் சொல்லுதல்.

புஞ்சை நஞ்சைக்கும் புனற்றானியம் விளைய
மழைபெய்ய வில்லையென்று மனதிலே நீ நினைத்தாய்
கிரகங்கள் மாரிக் கிருபையுட நிற்கிறது
ஊரார்கள் சேர்ந்து உகந்துமே யெல்லோரும்

கிராம நல்ல தேவதையைக் கிருபையுடன் கையெடுத்தால்
இந்த மாசம் போயினிவருமா சந்தனிலே
கண்மாய் பெருக கனத்தமழை பெய்யுமிப்போ
நஞ்சை புஞ்சையெல்லாம் நலமாகவே விளையும்
அஞ்சாதே யிப்போ தடுமை சொன்னேன் நீபாரு
நாடுசெழிக்கும் நல்ல மழை பெய்யுமிப்போ

நச்சுக்கெவுளியைப் பற்றிப் சொல்லுதல்.

குடியிருக்குமில்லம் குறிப்பாகும் வீடதனில்
சனிமூலையோரம் சார்ந்த இடந்தனிலே
கெவுளி யொன்று தானிருந்து கெச்சுக் கெச்சென்றுகத்த
நச்சுக்கெவுளி யென்று நான்கண்டேன் தீர்மானம்
கத்தினபின்பு கலக்கமிக வுண்டாச்சு
வாட்டங்கவலை மனவருத்த முண்டாச்சு
மனவருத்தந்தீர வகைகேளு மென்னுசான்
துற்கைக் கருச்சனைகள் துரிதமுடன் செய்தாக்கால்
நச்சுக்கெவுளி நல்லதொரு வாயடைக்கும்
மறுவாரத்திற்குள் ளாற்றிடுவேன் நீபாரு
சுகமுந் தருகிறேன் சுந்தரமே நீகேளு

கொடுத்து வைத்த பொருளைப் பற்றிச் சொல்லுதல்

அரசியென்ற பெண்ணு மரசனென்ற மன்னனுந்தான்
சேர்ந்து கொண்டு வைத்த திரவியங்களுந் தானும்
வருமோ வராதோ வகைகேட்போ மென்று வந்தாய்
மனதிற்கலக்க மற்றொன்று மெண்ணாதே
வாங்கின பேர்கள் மனவருத்த மாகுமுன்னே
கொடுத்திட வேணுமென்று கூறினது உண்டாசான்
கையிற்பொருளில்லாமல் கலங்கித் தவிக்குகிறார்
கடன்வாங்கி யாவது கையிற் கொடுப்ப மென்றால்
பணஞ்சிக்கவில்லை யென்று பார்த்து மயங்குகிறார்
இன்னங் கொஞ்ச நாளைக்கு ளியல்பாக வந்துவிடும்
மனதிற் கவலை வையாதே யென்னுசான்

அவையவக் குறைவுகளைப் பற்றிச் சொல்லுதல்.

ஆண் பெண்ணுஞ்சேர்ந்து அன்போ டிருக்கையிலே
கற்பக்கோளாறால் கால்கை முடக்க முண்டு

அவரவர்கள் செய்கை அரும்பாவந் தன்னாலே
இந்தக் குறை தீர்க்க யீசனாலாகாது
மத்தியிலே தான் வருகும் அவையவக்குறைவு
தீர்க்கவேணுமென்று திரங்கேட்டா யென்னிடத்தில்
நீராக்குறைகளையுந் தீர்ப்பதெப்போ யென்னுசான்
ஆராலுங்கூடாது அக்குறையை தீர்ப்பதற்கு

கப்பலேறிப் பிழைக்கப் போகச் சொல்லுதல்.

இங்கே பிழைப்புக் கிடமில்லாதே யிருந்து
கப்பலேறிப் போய் கருத்தாய் பிழைப்பதற்கு
இப்போது வந்து யென்னிடத்திலே கேட்டாய்
உத்தரவு தாரேன் உடன் கப்பல்தானேறி
பிழைக்கும் வழியைப் பேராக நீபாரு
எந்தத்துறையி லிருக்கிறையோ அங்கு வந்து
கூடவிருந்து கொடுக்குகிறேன் பாக்கியத்தை
வேண்டியதோர் பாக்கியத்தை மிகவே நீ தான்சேர்த்து
நம்முடைய தேசம் நாட்ட மூடன் வருவாய்

சம்பளத்திற்குப் போகச் சொல்லுதல்.

சம்பளத்திற்குப் போனால் சரிவருமா அல்லதிப்போ
சொந்த வியாபாரம் சுகமாகச் செய்கிடவா •
என்றெண்ணி நீயும் யென்னைக்குறிகேட்டாய்
கைமுதலை போட்டுக் கணக்குகளைப் பார்த்தாக்கால்
சம்பளத் திட்டந் தான்கிடைக்கு மென்னுசான்
ஆகையினாலேதான் அடைவாகவே தானும்
சம்பளத்துக்கிப்போ தானிருப்பாய் பின்னாலே
சொந்த வியாபாரம் துலக்கமாய்த் தானடக்கும்
தனது வியாபாரம் சரியாய் நடத்திடலாம்

மாப்பிளையைக் கோறி கேட்டதற்குச் சொல்லுதல்.

கன்னியராசிக்குக் கலியாணஞ் செய்வதற்கு
மாப்பிளையைக்கோறி வகைகேட்டா யென்னுசான்
நமக்குப் பொருத்தமுள்ள நல்லதொரு மாப்பிளையை
விட்டுவிடக் கூடாது வேண்டியே நீகொடுத்தால்
மாப்பிளையும் பெண்ணும் வகையுடனே யிப்போது
அன்றிலும் பேடும் போல் அருமையாய்த் தானிருக்கும்

அரசிவந்தநேரம் அனேகம் பொருள் சேரும்
குழந்தை அனேகம் பெறுவாள் கொஞ்சமும் நீயஞ்சாதே
கலியாணஞ் செய்து கண்ணாலே நீபாரு

கல்யாணம் நடப்பதற்குச் சொல்லுதல்.

அரசிக்கிப் போது அருமையுடன் கல்யாணம்
எப்போ நடக்குமென்று என்னைக்குறி கேட்டாய்
மாப்பிளையின் வீட்டில் மகிழ்வாக யிப்போது
கலியாணஞ் செய்யக் கருத்தில் நினைவுமுண்டு
காலக்கிரகம் கருத்தாக நான் பார்த்தேன்
வியாழநோக் கந்தானும் மேலிட் டிருக்கிறது
கோளொன்று மில்லை குறிப்பான தேதியினில்
நாளிட்டுக் கல்யாணம் நன்றாய் நடத்திவிடு
பெண்ணாணுங் கூடிப் பிரபலமாய் வாழ்வார்கள்
மக்க ளனேகம் வகையாகவே பிறக்கும்

வெள்ளாண்மை பயிர்களைப் பற்றி சொல்லுதல்.

தஞ்சை புஞ்சை தன்னில் நலமான வெள்ளாண்மை
போனவருடத்தில் புகலாகப் போச்சுதென்றும்
இந்தவருடத்தில் இனிமையுடன் வெள்ளாண்மை
சரியாய் விளையுமா தானதிலுங் கீழ்விடுமா
என்றெண்ணி நீயும் என்னைக் குறிகேட்டாய்
சென்ற வருடத்தில் சிறந்ததொரு சுக்கிரனும்
வக்கரித்துக் கொண்டான் மழைகளும் பெய்யவில்லை
இந்த வருடத்தில் இனிமையுள்ள சுக்கிரனும்
நல்ல இடமிருக்கான் நாடுசெழித்துவிடும்
கண்மாய்க்குத் தண்ணீர் கணக்காகவே பெருகும்
மழைக ளனேகம் வருஷிக்கு மிவ்வருடம்
வெள்ளாண்மை நன்றாய் விளைவு மிகுந்துவிடும்

கருமகிரிகளைப் பற்றி சொல்லுதல்.

பூவுலகி லேதான் பொருந்துகின்ற மானிடரில்
பிள்ளையிலா மாண்டவர்கள் பேருலகில் மெத்தவுண்டு
அவர்களுக்கு நற்கருமம் அடைவாகச் செய்வதுண்டு
இன்னமொரு காரியத்தை யெண்ணி யிருப்பார்கள்
குஷ்டரோ கக்காரர் கொடுஞ் சீக்குக்காரருக்கும்

கரும கிரிகைசெய்தால் கணசீக்குண் டாகுமென்பார்
ஒருநாளுஞ் சீக்குவரா துண்மையிது யென்னுசான்
தண்ணீரிலே விழுந்து சாகுமனிதருக்கும்
கிணற்றில் விழுந்திறந்த கெடுமூடர் தங்களுக்கும்
கழுத்திற் கயர் போட்டுக் கனமிலா மாண்டவர்க்கும்
ஒருவற் கொருவ ருடன்குத்தி செத்தவர்க்கும்
வழியிலே போகையிலே மாயமாய் மாண்டவர்க்கும்
இடைவழியிற் சீவ னியல்பாகப் போனவர்க்கும்
மருந்துகளைத் தின்று மயக்கமாய் மாண்டவர்க்கும்
கிரிகளைச் செய்தால் கேடுவரு மென்பார்கள்
கேடுகளு மில்லை கிலேசங்க லொன்று மில்லை
துணிந்து நீசெய்தால் துக்கமில்லை என்னுசான்
பயந்து நீ செய்தால் பாரிற்கெடுதி யுண்டு
உயிர்போன பிற்பாடு ஒன்றுமில்லை என்னுசான்
செத்தவர்க ளோடே தீர்ந்தது அக்கிரகம்
ஆனுலொரு வழக்கு அடியேனுன் சொல்லுகிறேன்
வகைமோச மாக மாண்டவரின் தன்னுயிர்கள்
பிசாசுபோலேதான் பாரிலலைந் தேதிரியும்

அம்மாளென்ற தெய்வத்தின்பெயர் சொல்லுதல்.

தங்கம்மா வெள்ளையம்மா சந்தண மாரியம்மா
அங்கம்மா மீனம்மா அன்னம்மா வாவாவா
குருவம்மா காத்தம்மா கோமதி யம்மாவா
அப்பம்மா சீனியம்மா அலமேலம் மாவாவா
சின்னம்மா பொன்னம்மா சீரங்கத் தம்மாவா
கண்ணம்மா பொம்மியம்மா காளியம்மா நீவாவா
வடிவம்மா கோதையம்மா வாதம்மா வந்திடுவாய்
சுப்பம்மா சீதையம்மா துளசியம்மா வாவாவா
முத்தம்மா காத்தம்மா மூக்கம்மா புஷ்பவல்லி
செல்லம்மா ராமம்மா சிவனம்மா வாவாவா
அழகம்மா காந்தியம்மா ஆவம்மா வந்திடுவாய்
மங்கம்மா கிருஷ்ணம்மா மலையம்மா மாகதம்மா
சொர்ணம்மா லிங்கம்மா துரோபதை யம்மாவா
சுந்தரி யம்மாநற் சூழ்சந்திர காந்தியம்மா
சவுந்திரியம்மா யென் சங்கரம்மா வந்திடுவாய்

வாலையம்மா கெங்கையம்மா மாகாளி யம்மாவா
குப்பம்மா தாயம்மா கூடம்மா வந்திடுவாய்
கருப்பாயி அம்மா கன்னியம்மா வந்திடுவாய்
ஊமையம்மா செல்லியம்மா ஓங்கார அம்மாவா
குழந்தை யம்மா வள்ளியம்மா கூலம்மா வந்திடுவாய்
சுந்தரம்மா நாச்சம்மா சூரிய காந்தியம்மா
இலட்சுமி யம்மா இராக்கம்மா வாவாவா
கண்ணுடை யம்மாயென் கருதுமுத்தா லம்மாவா
பொன்னுடை யம்மாயென் புழுகாயி அம்மாவா
ஜானகி அம்மாபெரிய சதுர்வேத அம்மாவா
உலகம்மா ஆதியம்மா உற்றபாஞ் சாலியம்மா
பார்வதியம்மா யென்பவளம்மா வந்திடுவாய்
அம்மணி யம்மாபொன் னழசம்மா வந்திடுவாய்
செண்பகத் தம்மா சீத்தம்மா சோலையம்மா
வேம்பம்மா நாகம்மா வேலாயி அம்மாவா
அனுசம்மா சொக்கம்மா அயிலாயி அம்மாவா
சாத்தம்மா செல்லம்மா சவுந்தரம்மா காளையம்மா
கோவிந்த அம்மா குயிலம்மா வந்திடுவாய்
அய்யம்மா பெத்தம்மா ஆனந்த வல்லியம்மா
முனியம்மா போற்றும் முருகாயி அம்மாவா
வடிவம்மா நல்ல மருதம்மா வந்திடுவாய்
சுடலையம்மா விஜயராணி சுந்தர அம்மாவா
இராக்கம்மா மூக்கம்மா நல்லஉமை யம்மாவா
காளியம்மா மாரியம்மா காந்தாரி யம்மாவா
பெண்ணாச்சி யம்மா பேச்சிநல்ல ஊளியம்மா
சரஸ்வதியம்மா பெரிய ஜானகி அம்மாவா
சிவகாமி யம்மா தெய்வவிசா லாட்சியம்மா
அகிலாண்டத் தம்மா அக்கினி யம்மாவா
பாக்கியத்தம்மா பரிவா மிசக்கியம்மா

ஆயியென்ற தெய்வத்தின்பெயர் சொல்லுதல்.

மூத்தாயி காத்தாயி மூக்காயி சாத்தாயி
குப்பாயி பொன்னாயி கூடாயி அம்மாயி
உலகாயி மங்காயி உற்றஅழ காயியேவா
செல்லாயி வேலாயி சிறந்த முருகாயி

இராக்காயி பந்தாயி இராமாயி கந்தாயி
முனியாயி வீராயி மொட்டை யழகாயி
இருளாயி நாகாயி எல்லைமக மாரியேவா
கடம்பாயி பாலாயி கருப்பாயி அம்மாவா
ஆனந்தாயி பெரிய அயிலாயி வந்திடுவாய்
மின்னாயி நல்லாயி விலங்காயி இருளாயி
குமராயி குருந்தாயி குருவாயி வந்திடுவாய்
மருதாயி காக்காயி மயிலாயி வாவாவா
சங்கராயி பெரிய சவுந்தர ஆயியேவா
அரசாயி சின்னாயி அண்ணா மலையாயி
செக்கச் சிவப்பாயி சீரான சின்னாயி
சுந்தாயி வேலாயி சுடலையாயி வாவாவா
மாரியாயி பெரிய மலையாயி வந்திடுவாய்
சிவனாயி ஞானச் செல்லாயி வாவாவா
பூவாயி நல்ல புழுகாயி வந்திடுவாய்
பழனியாயி பெரிய பார்வதியே பாலாயி
ஆவுடையாயி நல்ல அழகாயி வந்திடுவாய்
மீனாட்சியாயி யிப்போ மின்னாயி வந்திடுவாய்
பொன்னாயி கண்ணாயி பூவாயி வந்திடுவாய்
காளியாயி பெரிய களுவாயி வந்திடுவாய்

அக்காளென்ற தெய்வத்தின் பெயர் சொல்லுதல்.

இராமக்கா பொம்மக்கா எல்லக்கா வாவாவா
இலட்சுமக்கா நல்ல இருளக்கா வாவாவா
அய்யக்கா குப்பக்கா அயிலக்கா வந்திடுவாய்
திம்மக்கா ஒய்யக்கா செல்லக்கா வாவாவா
அம்மணி யக்காயென் னழகக்கா வந்திடுவாய்
சாத்தக்கா வெள்ளையக்கா தாயக்கா வந்திடுவாய்
வடிவக்கா சுப்பக்கா மருதக்கா வாவாவா
முனியக்கா மின்னக்கா மொட்டையக்கா வாவாவா
ஆதியக்கா நாகக்கா ஆனந்தி யக்காவா
பூவக்கா கண்ணக்கா பொம்மக்கா வந்திடுவாய்
மணியக்கா வீரக்கா மாலையக்கா வந்திடுவாய்
சுந்தர அக்கா சுடலையக்கா வாவாவா
வேலக்கா இப்போ வேம்பக்கா வந்திடுவாய்

ஆச்சியென்ற தெய்வத்தின் பெயர் சொல்லுதல்.

மீனாக்ஷி காமாக்ஷி விசாலாட்சி வந்திடுவாய்
முத்தாச்சி பெத்தாச்சி முனியாச்சி பொம்மாச்சி
பொன்னாச்சி சின்னாச்சி பூவாச்சி கண்ணாச்சி
இராக்காச்சி செல்லாச்சி இராமாச்சி திம்மாச்சி
வடிவாச்சி யாச்சி மருதங்குடி யாச்சி
ஆவுடையாச்சி பெரிய ஆனந்த ஆச்சியேவா
உமையாச்சி பெண்ணாச்சி உலகாச்சி வேலாச்சி
குருவாச்சி ஆச்சி கோமதி யாச்சியேவா
சீரங்கத் தாச்சி செல்லாச்சி வந்திடுவாய்

சகல சாமிகளின் பெயர் சொல்லுதல்.

சீராய் விளங்குஞ் சிவசாமி தானாகும்
குருசாமி யான குமாருசாமி யேவாவா
முனிசாமி நல்ல முத்துச்சாமியாகும்
தம்புச்சாமி போற்றும் தங்கச்சாமி யாகும்
வேல்ச்சாமி முத்து வெள்ளைச்சாமியாகும்
சுருப்பணசாமி பெரிய கண்ணுச்சாமியேவா
மாடச்சாமி போற்றும் மயில்ச்சாமி வந்திடுவாய்
அண்ணாச்சாமி பெரிய அய்யாச் சாமியேவா
கோவிந்தசாமி நல்ல குப்புச்சாமியேவா
கருத்தச்சாமி முத்து கந்தசாமி யேவா
சுந்தரச்சாமி நல்ல சுப்புச்சாமியேவா
சிவத்தச்சாமி முத்து செல்லப்ப சாமியேவா
கோபாலசாமி நல்ல கூனுச் சாமியேவாவா
மன்னார்சாமி கந்த மலைச்சாமி யேவாவா
வீராச்சாமி பெரிய வேலுமயி லுச்சாமி
நாகசாமிக் குகந்த லாடாசாமி யேவா
ஸ்ரீ ரெங்கசாமி திருமலைச் சாமியேவா
இராமசா மிக்கிளைய இலச்சுமண சாமியேவா
பூவக்கசாமி நல்ல பொன்னுச்சாமி யேவாவா
மன்னாருசாமி மலைச்சாமி வாவாவா
பழனிவேல்ச்சாமி பாக்கிய சாமியேவா
அழகர்சாமியோடு அருணாசல சாமியேவா
பெரியசாமிக்குறிய பெத்தண்ண சாமியேவா

மந்திரசாமிக் குறிய மலைச்சாமி யெந்திரியே
செண்பகச்சாமி திருதில்லைச் சாமியேவா
இரத்தின சாமி யென் இரங்கசாமியேவாவா
சின்னச்சாமிக் குறிய செல்லச்சாமியேவா
துரைச்சாமி வேண்டுவரம் சொல்லும்பால் சாமியேவா
காளைச்சாமி யோடு கருப்பண சாமியேவா

சகல லிங்கத்தின் பெயர் சொல்லுதல்.

சொக்கலிங்கம் மாலிங்கம் சுந்தரபகா லிங்கமுடன்
வயித்திலிங்கம் சம்புலிங்கம் மாணிக்க லிங்கமேவா
தருமலிங்கம் பூவலிங்கம் சந்தண மாலிங்கமுடன்
இராமலிங்கம் சோமலிங்கம் நல்லமகா லிங்கமேவா
இரட்டைலிங்கம் வீரலிங்கம் இயல்பாங்குற் ருலலிங்கம்
மேகலிங்கம் செல்வலிங்கம் வேண்டும் அரிவிலிங்கம்
சாத்தலிங்கம் மூலலிங்கம் தக்கசொர்ண லிங்கமுடன்
கூடலிங்கம் சங்கலிங்கம் குலவுமூத்து ராமலிங்கம்

அப்ப னென்ற தெய்வத்தின் பெயர் சொல்லுதல்.

பேச்சியப்பன் காளியப்பன் பேரான மாரியப்பன்
செல்லப்பன் ராக்கப்பன் சீரான வெள்ளையப்பன்
கொண்டப்பன் நாகப்பன் குருவப்பன் வாலையப்பன்
மணியப்பன் வீரப்பன் மாலையப்பன் காளையப்பன்
அங்கப்பன் முத்தப்பன் அழகப்பன் சோலையப்பன்
சடையப்பன் அம்மையப்பன் சருக்கரையப்பாவா
வேலப்பன் பொன்னப்பன் மிகுந்த மாடப்ப னெனும்
சின்னப்பன் கந்தப்பன் திருமலை யப்பாவா
மாடப்பன் கூடப்பன் மகிழ்பழனி யப்பாவா
சாத்தப்பன் காத்தப்பன் தக்கதொரு நாச்சியப்பன்
பச்சையப்பன் சொக்கப்பன் பகர்தில்லையப்பாவா

முத்தனென்ற தெய்வத்தின் பெயர் சொல்லுதல்.

அங்கமுத்து தங்கமுத்து அழகான ஞானமுத்து
சுடலைமுத்து சின்னமுத்து சொரிமுத்து சோனைமுத்து
காத்தமுத்து ருக்குமுத்து கசமுத்து சங்குமுத்து
மாணிக்க முத்து வயிரமுத்து பேச்சிமுத்து
மதுரமுத்து கும்பமுத்து வண்ண முத்து காளமுத்து

மாரிமுத்து காளிமுத்து மாசான முத்துடனே
நல்லமுத்து செல்லமுத்து நாகமுத்து வீரமுத்து
சொர்ணமுத்து அன்னமுத்து சோதிப்பொன் முத்தேவா

அய்யா வென்ற தெய்வத்தின் பெயர் சொல்லுதல்.

முத்தையா வீரையா முருகையா சித்தையா
கருப்பையா சின்னையா கந்தையா குட்டியய்யா
வேலய்யா பொன்னையா வெள்ளையா ஆண்டியய்யா
மொட்டையா சுப்பையா மூக்கையா வந்திடுவாய்
இராமையா காத்தையா இலட்சுமண அய்யாவா
பாப்பையா தங்கையா பாலையா வேலய்யா
செல்லையா பொம்மையா சிறுத்தொண்ட அய்யாவா
நல்லய்யா ராஜய்யா நாகய்யா சுந்தரய்யா

சகல தெய்வங்களின் பெயர் சொல்லுதல்.

அ வென்ற அச்சரம்.

அம்பலவாணன் கடம்பன் அருண கிரிநாதன்
அய்யனன் கோபாலன் அருணாசலம் சேது
அரிகான் காத்தன் ஆண்டியப்பன் பூபாலன்
அய்யம் பெருமாள் ஆனந்த ராயனேவா
அப்பாவு குற்ருலம் அரியபுத்திரா வந்திடுவாய்
அகிலடியானுன ஆலடி பலாவடியான்
அக்கினிமாடன் ஆகாச மாடனேவா
அடைக்கலமென்ற ஆண்டியே வந்திடுவாய்
அழகிய மணவாளா யென்னன்புக் குகந்தவனே
ஆறுமுகன் கந்தன் அண்ணாமலை நாதன்
ஆதிமூலம் ராக்கு அரசுபத்தி பொன்மலையான்
ஆனந்தமென்ற அய்யா பனையடியான்
ஆபத்துக் காத்தான் அழகராஜ னிறைவன்
ஆண்டி பிச்சாண்டி அப்பன் முனியாண்டி
இராமன் கோவிந்தன் இராஜகோபாலனேவா
இராகவன்மாயன் இலக்குமி நாதனேவா
இருளாண்டி சாத்தன் இலட்சுமணன் ஸ்ரீராமன்
இராயசுப்பு ஐயா இராமச்சந்திர சேகரனே
இருளப்பன்வீரன் இலாடசன்னாசியேவா

இரத்தினம் நாகப்பன் நல்ல அழகம்பெருமாள்
உச்சினிமாகாளி ஓம் நமசி வாயமேவா
எதிராஜன் சோமன் இடும்பன் கழுவடியான்
ஒண்டிப் புலியன் நமோ நாராயணனே

கவென்ற அர்சரம்.

கதிர்வேல் சிங்காரம் கண்ணாயிர மூர்த்தி
கல்யாண சுந்தரன் கடம்பவனச் சுந்தரமே
கலியன் கலிதீர்த்தான் கனக சபாபதியே
கந்தன் கடப்பன் கருக்குவா லையனேவா
கசமாடன் வீரன் கசவன்குப்பை யாண்டியேவா
கருப்பன் பெரிய கலியாணி கூலாணி
கச்சியப்பன் வீரன் காளியப்பன் வாவாவா
காத்த பெருமாள் கருமலையான் வீரனனே
கிருஷ்ணன் குபேரன் கீர்த்தியுள்ள மாமாயன்
குற்றால மென்ற குற்றால் நாதாவா
குமரகுருபரனே குப்பையாண்டி அய்யாவா
கூழென்று சொல்லும் குருநாதன் கொண்டையனும்
கேசவன் நாராயணன் கீர்த்தியுள்ள சோலைமலை
கோசலை ராமன் குமரேசன் வேலவனே
கோட்டை மலைக்கருப்பன் கூறும்லாட சன்னாசி

ச-வென்ற அச்சரம்.

சங்கரன் சண்முகனும் சாம்பசிவ சன்னாசி
சங்கரபாண்டியனும் சாமிக்கண் வந்திடுவாய்
சச்சிதானந்த சதாசிவனே வந்திடுவாய்
சந்தான கிருஷ்ணன் சங்கரா னந்தனேவா
சங்கு சக்கரபாணி சாரங்கபாணியேவா
சடையன் சடையாண்டி சப்பாணி மாவீரா
சஞ்சீவிராயன் தக்க அநுமானே
சவுந்தர பாண்டியனே சதுர கிரியானே
சங்கிலிக் கருப்பா சப்பாத் தடிக்கருப்பா
சாமிநாதன் குமரன் சபாபதியே சங்கிலியே
சிவஞான மான சிங்கார வேல்வீரா
சிதம்பர நாதா சின்னுமலை யப்பாவா

சின்னக் கருப்பா சிங்கார மேவாவா
சீதாபி ராமா திருமலை முத்தேவா
சீனிவாசன் கடப்பன் திருமேனி பூமேனி
சுருளிமலை யாண்டி சூரியநா ராயணனே
சுடலைமாடன் சாத்தான் சோமு யெழுந்திரியே
சுந்தரமான சோமனே வேலவனே
சுப்பிரமணிய னோடு சுந்தரா ஜன்றனும்
சூரியனான சுத்தவீரனே தீரா
யெல்லையா நல்லையா தெத்தையா மாதவனே
சேதுபதியான செகதீச ராமனேவா
சொக்கையா வென்ற சோமசுந் தரமேவா
சோமனென்ற மெய்யா சொல்லுசிவன் சந்திரனே
சோலைமலையான் சுடலைமுத்து சோனைமுத்து

த-வென்ற அச்சரம்.

தங்கவேல் வேலு சந்திரசேகரனே
தன்னகுட்டித் தெய்வத் தங்கமே யெந்திரியே
தாண்டவராயன் பழனி சபாபதியே சங்கிலியே
தாமோ தரன்முகுந்தன் சச்சிதா னந்தனேவா
திருமலை யாண்டார் திருமால் திருவடியே
திவிகமணி நாதன் செல்ல விநாகனே
திருநாயகனும் ஸ்ரீரெங்க நாயகனே
தென்கரையானோடு தில்லைவிநாயகனே
தெட்சண மூர்த்தி தெய்வ சிகாமணியே
தொந்தியென்று சொல்லுந் தொந்திக் கணபதியே

ந-வென்ற அச்சரம்.

நமசிவாயம் பெரிய நல்லகண்ணு யெந்திரியே
நடனசுந் தரமென்ற நடேசன் சபாபதியே
நல்லதம்பி அம்பி நற்பெரிய நம்பியேவா
நம்பெருமாளான நம்மாழ்வார் பேயாழ்வார்
நல்லமாடன் பெரிய நாகப்பன் நல்லசிவம்
நாராயணனான நல்லபெரு மாளேவா
நாதமுனி யப்பன் நரசிங்கம் வீரசிங்கம்
நீலமேக நாதன் நேயரெகு ராமனேவா
நெடுகவளர்ந்த நெடுமாடா நொண்டிமாடா

ப-வென்ற அச்சரம்.

பரமேசுரன் பகவன் பாவவினா சன்பழனி
பலாவடியா னுன பகர்கருப்ப அய்யாவா
பழனிக் குமாரு பரமபதி யேவா
பத்ம நாதன் வரதன் பாரழந்த கண்ணனேவா
பரிமண மென்ற பராங்குசனே பச்சையப்பா
பதினெட்டுலாடர் படிக்கருப்பா அய்யாவா
பாண்டியன் பிச்சை பாவாடை ராயனேவா
பிச்சைக்கார னென்ற பிச்சாண்டி மாயாண்டி
புன்னைவன நாதனென்ற புஷ்பவன நாதாவா
பூபாலன் நல்ல பூலோகங் கார்த்தவனே
பூச்சியென்று சொல்லும் புண்ணிய மூர்த்தியேவா
பூவாடை போற்றும் பூவக்க னேவாவா
பெரியநம்பி சின்னநம்பி பெருமாள் திருமாலே
பெரிய கருப்பன் பேர்பெரிய மாவீரா
பேயாழ்வா ரோடு பெரியாழ்வார் மாயாழ்வார்
பொன்னம் பலநாதன் பொன்ரெங்க நாதனேவா
பொம்மனும் திம்மன் புகழ்மதுரை வீரையனே

ம-வென்ற அச்சரம்.

மருதா வுடையார் மாயழக மூர்த்தியேவா
மலையாண்டி மாயாண்டி மயில்சுந்தர மாண்டி
மதுரைவீரன் சமையன் மார்நாட்டுப் பொன்கருப்பே
மதுரம் பெருகும் மணவாள மாமுனியே
மாதவ கோவிந்தன் மாயா சொரூபனேவா
மாடசாமி நல்ல மாடன் கசமாடன்
மாசாணஞ் சப்பாணி வல்லதொரு வீரணனே
மீனாட்சி சுந்தரமாய் விளங்குஞ் சோமசுந்தரனே
முருகன் முருகேசன் முத்துக்குமாரு மூத்தன்
முத்துக் காத்தானென்ற முத்துமலை யேவாவா
முனியன் முனியாண்டி மூக்கன் மங்கான் யேகலிங்கம்
முத்திருளப் பன்சின்ன மூத்துக் கருப்பாவா
மூத்துராக்கு பெரிய மூத்தழகு வீராவா

வ-வென்ற அச்சரம்.

வடிவேலன் வீரன் வள்ளியுட நாயகனே

வயிரவன் காமன் வராகவனே வாவாவா
வாமனவ னென்ற வரதவெங்க டேசனே நீ
வாசுதேவன் பெரிய மாயழகனேவாவா
விஸ்தநாதா பெரிய வீரபத்திரா வந்திடுவாய்
விளங்கு மூடையாரே மெய்காவல் காத்தவனே
வீரபத்திரன் பெரிய வீரமுத்த னேவாவா
வீர சிகாமணியே வெற்றிவே லாயுதனே
வெங்கிட்ட ராமா வெங்கிடா சலத்தானே
வேணு கோபாலா வீரநல்ல மூர்த்தியேவா

தமிழ்நாட்டின் நான்கெல்கை.

திருப்பதி யென்ற தேசம் வடக்காகும்
கொங்குநா டெல்கை குடகுகளு மேற்றிசையாம்
தெற்குகன்னி யாகுமரி தென்றிசைகள் தானாகும்
கிழக்கு ராமேஸ்பரமுங் கீழ்திசைகள் தானாகும்
இந்தநான்கெல்கை யிருந்த தமிழ்நாட்டை
சொல்லுகிறே னிப்போ சூட்சமதை நீகேளு
பட்டியென்றும் சேரியென்றும் பகருவது ஓர்வசனம்
குளமென்றும் பாதையென்றும் குடியென்றுங் கூறுவர்கள்
கோட்டைஎன்றும் பேட்டை என்றுங்கூறுமொருவசனம்
ஊருஊ ரென்றும் உற்றநகர்க ளென்றும்
பாளைய மென்றும் பகர்மங்க ளங்களென்றும்
புரமென்ற ஊரும் புகழ்குறிச்சி தன்னோடும்
இன்னும் பலவூர் இருக்கிறது கேளாசான்

## பட்டிகளென்ற ஊர்களின் பெயர்.

அ-வென்ற அச்சரம்.

அருவிமலைப்பட்டி அரசபட்டி வீரபட்டி
அட்டைப்பட்டி தாண்டி அய்யாபட்டிக்கு வந்தேன்
அநுமந்தன்பட்டி அருக்கம்பட்டி யும்பார்த்தேன்
அத்திபட்டி யோடு அகத்தாபட்டி யுடனே
அம்பட்ட பட்டியுடன் அம்மாபட்டி பார்த்தேன்
அச்சம்பட்டி கண்டு அரட்டாபட் டிக்குவந்தேன்
ஆவரம் பட்டியுடன் ஆண்டிபட்டி யும்பார்த்தேன்
ஆசாரி பட்டிவிட்டு ஆச்சியம் பட்டிவந்தேன்

இராஜாக்க பட்டியுடன் இடையபட்டியும் பார்த்தேன்
இராவுத்தன் பட்டிகண்டு இராஜலிங்கம் பட்டிவந்தேன்
இரங்கப்பன் பட்டிவந்து இரசக்க பட்டிவந்தேன்
இலிங்கம் பட்டிகண்டு இராமபட்டியும் பார்த்தேன்
இலெங்கிப் ப்ட்டிபார்த்து இராமலிங்கம் பட்டிவந்தேன்
உசிலம்பட்டி பார்த்து உடையார்பட் டிக்குவந்தேன்
உன்னிபட்டி வந்து உறங்காம்பட்டி பார்த்தேன்
ஊத்துப்பட்டி கண்டு ஊஞ்சாம்பட்டி பார்த்தேனுன்
ஊண்டுகாப் பட்டியுடன் ஊரணிப் பட்டிகண்டேன்
எறம பட்டிபார்த்து ஏரியூர் பட்டிவந்தேன்
ஐயம்பட்டியோடு அனுப்ப பட்டி யும்பார்த்தேன்
ஒத்தப்பட்டி கண்டு ஓடப்பட்டிக்கு வந்தேன்

க-வென்ற அச்சரம்.

கங்குவார் பட்டியோடு கம்மாய்ப்பட்டி பார்த்தேன்
கல்லுப்பட்டியோடு கட்டாரம் பட்டி வந்தேன்
கஞ்சம்பட்டி பார்த்து கண்ணுபட்டிக்கு வந்தேன்
கட்டம்பட்டி கண்டு கணக்கம்பட்டி யும்பார்த்தேன்
கலுங்குப்பட்டி வந்து கத்தைப்பட்டி கண்டேனுன்
கணபதிப் பட்டியுடன் கயிலப்பட்டி கண்டேனுன்
கரட்டுப்பட்டி வந்து கண்டிபட்டி யும்பார்த்தேன்
கள்ளம்பட்டி கண்டு கவண்டப்பட் டிக்குவந்தேன்
கச்சாரம்பட்டிவிட்டுக் கணைவாய்ப் பட்டிக்கு வந்தேன்
கட்டையத் தேவன்பட்டி கரடுபட்டி யும்பார்த்தேன்
காசம்பட்டி சென்று காஞ்சிரம் பட்டிவந்தேன்
காரியா பட்டியுடன் கடுமிட்டான்பட்டிகண்டேன்
காமயன் பட்டியுடன் கண்டாங்கிப் பட்டிவந்தேன்
கிடாசிப்பட்டி கண்டு கீழப்பட்டி யும்பார்த்தேன்
குடிப்பட்டி பார்த்து குச்சம்பட் டிக்குவந்தேன்
குன்றப்பட்டி வந்து குருக்களப் பட்டிகண்டேன்
குன்னம்பட்டி கண்டு குத்தாலம் பட்டிவந்தேன்
குன்னூரம் பட்டிவந்து குள்ளம்பட்டி யும்பார்த்தேன்
கூமாப்பட்டி கடந்து கூடம்பட்டி யைப்பார்த்தேன்
கெச்சம்பட்டி வந்து கேசவன் பட்டிவந்தேன்
கொட்டாம்பட்டி பார்த்து கொடுப்பம்பட் டிக்குவந்தேன்

கொண்டையன் பட்டி கோணபட்டியும் பார்த்தேன்
கோடாங்கி பட்டியுடன் கொங்கம்பட்டி யும்பார்த்தேன்
கோவிற்பட்டி கண்டு கோலாரு பட்டிவந்தேன்
கோசுப்பட்டி பார்த்து கோனுப்பட்டிக்கு வந்தேன்

ச-வென்ற அச்சரம்.

சடையம்பட்டி யோடு சல்லிபட்டி யும்பார்த்தேன்
சலுப்பபட்டி தாண்டி சந்திரகிரிப் பட்டிவந்தேன்
சடைச்சிபட்டி பார்த்து சவுடார்பட் டிக்குவந்தேன்
சத்திரப் பட்டியுடன் சங்குபட்டி யும்பார்த்தேன்
சாலுவார் பட்டியுடன் சாணர பட்டிகண்டேன்
சாக்கிலி பட்டியோடு சாத்தம்பட்டியும் பார்த்தேன்
சித்தன்ன பட்டியுடன் சித்தன்பட்டி யும்பார்த்தேன்
சின்னாள பட்டியுடன் சிந்துபட்டி யும்பார்த்தேன்
சிட்டம்பட்டி கண்டு சின்னப்பட் டிக்குவந்தேன்
சிலைமலைப் பட்டிவந்து சிங்கப்பட்டி யும்பார்த்தேன்
சில்லாம் பட்டிகடந்து சிட்டுலொட்டு பட்டிவந்தேன்
சித்திரம் பட்டியோடு சிங்கிலிப் பட்டிவந்தேன்
சிலுக்கார் பட்டியுடன் சித்தையன் பட்டிவந்தேன்
சீனிநாயக்க பட்டி சீல்நாயக்க பட்டிகண்டேன்
சுரைக்காய்ப் பட்டியோடு சுக்காம்பட் டிக்குவந்தேன்
சுருளிப்பட்டி கண்டு சுந்தராஜன் பட்டிவந்தேன்
சூரம்பட்டி பார்த்து சூரியம் பட்டிவந்தேன்
சென்னம் பட்டிதாண்டி செட்டியபட் டிக்குவந்தேன்
செம்பட்டி வந்து செவல்பட்டி யும்பார்த்தேன்
செம்மணிப் பட்டிவிட்டு சென்னகரம் பட்டிவந்தேன்
சேடபட்டி கண்டு சேக்கிபட்டி யும்பார்த்தேன்
சொக்கம்பட்டி வந்து சொக்கனுதன் பட்டிகண்டேன்
சோளம்பட்டி பார்த்து சோயிலுப் பட்டிகண்டேன்

த-வென்ற அச்சரம்.

தம்பிபட்டி பார்த்து தவிட்டாம் பட்டிக்குவந்தேன்
தாதம்பட்டி பார்த்து தாயிலுப் பட்டிகண்டேன்
தாழைப்பட்டி கண்டு தாமரைப் பட்டிவந்தேன்
தாராப்பட்டி கண்டு தாமிரப் பட்டிவந்தேன்
தச்சனம் பட்டிவிட்டு தாருகப் பட்டிவந்தேன்

திம்ம நாயக்கபட்டி திருக்கனும் பட்டிகண்டேன்
துலுக்க பட்டிகண்டு தும்பைப்பட்டி யும்பார்த்தேன்
தென்னம்பட்டி கடந்து தெள்ளுப்பட்டி யுங்கடந்தேன்
தெப்பம்பட்டி வந்து தெத்துப்பட்டி கண்டேனுன்
தேத்தாப்பட் டிகடந்து தேவதானப் பட்டிவந்தேன்
தொட்டிய பட்டி விட்டு தொப்புலாம் பட்டிவந்தேன்
தொட்டணம் பட்டிகண்டு தொக்கிபட்டி யுப்பார்த்தேன்
தோமலைப் பட்டிகண்டு தோட்டிபட்டி யும்பார்த்தேன்

ந-வென்ற அச்சரம்.

நத்தம்பட்டி யோடு நரசிங்கம் பட்டிவந்தேன்
நரிப்பட்டி பார்த்து நவநாதபட்டி வந்தேன்
நடுவப்பட்டி கண்டு நத்தப்பட்டிக்கு வந்தேன்
நாலெட்டம் பட்டியோடு நாங்கினிப் பட்டிகண்டேன்
நாகல்நா யக்கன்பட்டி நாகப்பட்டி யுங்கடந்தேன்
நிப்பப்பட்டி பார்த்து நிலையம்பட் டிக்குவந்தேன்
நீறுணிப்பட்டிகண்டு நீட்சிபட்டி யும்பார்த்தேன்
நுக்கம்பட்டி பார்த்து நூபலைப் பட்டிவந்தேன்
நெல்லையம் பட்டிவிட்டு நெடுங்குளப் பட்டிகண்டேன்
நொச்சிபட்டி கண்டு நோக்குப்பட்டி யும்பார்த்தேன்

ப-வென்ற அச்சரம்.

பள்ளபட்டி வந்து பட்டிவீரன் பட்டிவந்தேன்
பரசுராம் பட்டியுடன் பால்வண்ணம் பட்டிகண்டேன்
பாப்பயநாயக்கன் பட்டி பாறைப்பட்டி யும்பார்த்தேன்
பிள்ளபொருத்தன் பட்டி பிறங்குபட்டி யுங்கடந்தேன்
புளியம்பட்டி கடந்து புதுப்பட்டியும் பார்த்தேன்
புல்லாம்பட்டி கடந்து பூலாம்பட் டிக்குவந்தேன்
பூசாரிபட்டிகண்டு புதுக்குடிப் பட்டிகண்டேன்
பெருமாபட்டி பார்த்து பெத்தண்ணம் பட்டிவந்தேன்
பொய்கைக் கரைப்பட்டி பொன்னம்பட்டி வந்தேனுன்
போடிநாயக்கன் பட்டி போடிப்பட்டி கண்டேனுன்

ம-வென்ற அச்சரம்.

மலைப்பட்டி பார்த்து மணிப்பாறைப் பட்டிவந்தேன்
மணிப்பட்டி கண்டு மண்ணுக்குண்டாம் பட்டியுடன்

மாவுத்தன்பட்டி மலம்பட்டி மாலைப்பட்டி
மலையாளத் தான்பட்டி மாகாளிப் பட்டியுடன்
முத்துப்பட்டி பார்த்து முருகார பட்டிவந்தேன்
மூத்தம்பட்டி கடந்து மூடிக்கிலாம் பட்டிகண்டேன்
மூலிப்பட்டி வந்து மூலிக்கரைப் பட்டி வந்தேன்
மெத்தைப்பட்டி விட்டு மேகலிங்கப் பட்டியுடன்
மேட்டுப்பட்டி பார்த்து மேலப்பட் டிக்குவந்தேன்
மொக்கப்பட்டி யோடு மோசியம்பட்டி வந்தேன்

வ-வென்ற அச்சரம்.

வள்ளால பட்டியுடன் வடுகபட்டி யும்பார்த்தேன்
வளையபட்டி கண்டேன் வடக்கம் பட்டி யும்பார்த்தேன்
வன்னிவேலன் பட்டி வடக்குபட்டி யும்பார்த்தேன்
வன்னியம் பட்டிவிட்டு மாகாளி பட்டிவந்தேன்
வாடிப்பட்டி பார்த்து வானரம் பட்டிவந்தேன்
விளாம்பட்டி கண்டு விட்டுலுப் பட்டிவந்தேன்
விருதுபட்டி பார்த்து வீசலூர் பட்டிவந்தேன்
வீராளம் பட்டியுடன் வீராச்சி பட்டிகண்டேன்
வெள்ளரிப் பட்டிகண்டு வெள்ளையன் பட்டிவந்தேன்
வேப்பம்பட்டி பார்த்து வேலாம் பட்டி கடந்தேன்
வையம்பட்டி பார்த்து வைக்கம்பட் டிக்குவந்தேன்

ஊர்களின் பெயர்

கருவூர் முதுகுளத்தூர் கண்டனூர் பில்லூரு
மாத்தூரு நெல்லூரு மருதூர் கிராயூரு
சேத்தூரு கோட்டூரு திண்டூரு நாலூரு
ஆத்தூரு செம்பூரு ஆலாத்தூர் வில்லூரு
அயலூரு கோட்டையூர் ஆவியூர் நெல்லூரு
குளத்தூர் மணலூரு குன்னத்தூர் கானூரு
இளமனூர் தேனூர் இடைக்காட்டூர் புத்தூரு
ஆத்தூர் அரியலூர் அலங்கானூர் வெள்ளூரு
பள்ளத்தூர் மானூரு படைமாத்தூர் குன்னூரு
மேலூரு கீழூரு வேம்பத்தூர் தஞ்சாவூர்
பார்த்திபனூர் மறையூர் பனையூர் மூறையூரு
திருப்பத்தூர் நல்லூரு திருக்கோஷ்டியூர் புலலூர்

திருச்செந்தூர் கண்ணனூர் திருவாதவூர் தோப்பூர்
தோப்பூரு வேலூரு துறையூர் இறையூரு
ஆப்பனூர் சாத்தூர் அரியனூர் மாலூரு
அம்மைய நாயக்கனூர் அரசனூர் ஓம் நல்லூர்
விளத்தூர் கொடுமளூர் மிளகனூர் சின்னமனூர்
சந்தையூர் பேரையூர் சாப்டூர் பழையவூர்
உரப்பனூர் கப்பலூர் ஓமலூர் சீரம்பூர்
கோவிந்தூர் திரிச்சூர் கூளப்ப நாயக்கனூர்
பிரமனூர் வள்ளியூர் பேரூர் ஸ்ரீவில்லி புத்தூர்
அருமனூர் கானூர் அழகனூர் ஒக்கூறும்
மாத்தூர் வளையூரு மானூர் திரும்பூரு
இலுப்பூர் புதூரு இயல்தேனூர் சீரனூர்
கருவைநல்லூர் மேட்டூர் கடப்பூர் துறையூரு
கடைய நல்லூர் கல்லூர் கடலூரு பட்டூரு
வண்டியூர் செல்லூரு வரகனூர் தச்சநல்லூர்
கருவநூர் சேத்தூர் காவனூர் வில்லூரு
இளவந்தூர் உப்புத்தூர் இயல்பட்டம் புத்தூரும்
நாலெட்டம் புத்தூர் நல்லபெருமத் தூரும்
வெருகனூர் சோரனூர் மேலாஞ் சமையநல்லூர்
கருப்பூரு பார்த்து கடூரும் வயலூர் பார்த்தேன்
பாவூரு பாலூரு பச்சமுள்ள சித்தூரு
வீரவநல் லூருதிரு விடைமருதூர் நல்லூரு
ஆதனூர் வீரவனூர் ஆவலூர் வையூரு
ஆமத்தூர் கோயமுத்தூர் அரியநல்லூர் நிலையூர்
ஒண்டுப் புலியூர் உத்தப்ப நாயக்கனூர்
களத்தூர் கருமாத்தூர் காவனூர் செவலூரு
கூடலூர் கள்ளிபுத்தூர் கூறுபெருமாத்தூரு
மூகலூர் திருவாங்கூர் மூதியாரூர் புல்லூர்
சிவலூர் செழிய நல்லூர் திருவிடையா மருதூர்
பழையனூர் வீசலூர் பாவூர்போடி நாயக்கனூர்

குளமென்ற ஊர்களின் பெயர்.

பனைக்குளம் மாங்குளம் பறையங்குளம் பார்த்தேன்
ஆலங்குளமும் அரசகுள மூந்தெறிந்தேன்

அல்லிக் குளமும் யானைக்குள மும்பார்த்தேன்
வெள்ளா குளமும் மிதலைக்குள முங்கடந்தேன்
மருதங் குளமும் பாரவங்குள மிருந்தேன்
இலுப்பைக் குளமும் இலந்தைக்குள மறிந்தேன்
கடமங் குளத்தோடு கரிசக்குளந் தெரிந்தேன்
புளியங் குளத்தைவிட்டுப் பூலாங் குளம்பார்த்தேன்
சக்கிலியன் குளமும் தாமரைக் குளந்தெரிந்தேன்
கொட்டங் குளமுங் கொடிக்குளமும் நான்பார்த்தேன்
செங்குளத் தோடு சிவக்குளமும் பார்த்தேனுன்
கட்டிக் குளமுங் கடுவங் குளம்பார்த்தேன்
வலையங் குளமும் வடுகன்குள மும்பார்த்தேன்
ஊமச்சி குளமும் ஊஞ்சாங் குளம்பார்த்தேன்
கொத்தன் குளத்தோடு கொக்குளமும் நான் பார்த்தேன்
நெடுங்குளம் மொச்சிகுளம் நேராம் இடையன்குளம்
துலுக்கங் குளமும் சொல்லும் வேப்பங்குளமும்
நாச்சி குளமும் நல்லதொரு பேய்க்குளமும்
கருசக் குளமுங் களப்பங்குளம் பார்த்தேன்
சின்னி குளமுஞ் செவற்குளமுங் கண்டேனுன்
இலவங் குளமும் இருமங் குளங்கடந்தேன்
குருவி குளமுங் குறிஞ்சாக் குளம் பார்த்தேன்
கள்ளிக் குளமும் கருந்தட்டான் குளமுங்கண்டேன்
விளாத்தி குளமும் வீலிகுள மும்பார்த்தேன்
குமழங்குளமுங் குறவங்குளங் கடந்தேன்
தல்லா குளமுஞ் சம்பைக்குளம் பார்த்தேன்
மாங்குளமும் நல்ல மாடக்குளம் பார்த்தேன்
முறிப்பங் குளமும் முள்ளிக் குளங்கடந்தேன்
தேவற் குளமுந் திருவாம்பாஞ் சாங்குளமும்
விடத்தக் குளமும் விரும்பு மிலந் தைக்குளமும்
சுண்டக் குளமும் சூழுமிடும் பங்குளமும்
ஆரைக் குளமும் அருவக் குளத்தில் வந்தேன்
கொக்கரைக் குளத்துடனே கூனங் குளத்தில்நின்றேன்
காடிக் குளமுங் கழுவங் குளம்பார்த்தேன்
குருந்தங் குளமுங் கூறுபெரிய குளமும்
சாத்தங் குளமுந் தக்ககிடா ரங்குளமும்

கட்டங்குளமும் காராங்குளமும் பார்த்தேன்
நடுவக்குளம் விட்டு நரிக்குளமும் நான்பார்த்தேன்
பானுங்குளத்தைவிட்டு பாப்பான் குளமும்வந்தேன்
ஆரைக்குளம் பார்த்து அனுப்பங் குளங்கடந்தேன்

புரமென்ற ஊர்களின் பெயர்.

வில்லாபுரமும் மீனாட்சியா புரமும்
குப்புணு புரமுங் கூவலப்புரம் பார்த்தேன்
குமராபுரமும் கோபால் புரம்பார்த்தேன்
திருமால் புரமுந் திருவனந்த மாபுரமும்
இராமேஸ்வரமும் இராமநாத புரமும்
மம்முசாபுரமும் மகராஜா தன்புரமும்
ஆவுடையாபுரமும் ஆற்றுப் புரம் பார்த்தேன்
கயிலாசநாதபுரம் காமாக்ஷியாபுரமும்
சங்கலிங்காபுரமும் சமுசாபுரம் பார்த்தேன்
ராமகிருஷ்ணு புரமும் நாராணுபுரம் பார்த்தேன்
அய்யனுபுரம பார்த்து அடைக்கல புரம்வந்தேன்
எட்டையாபுரத்தோடு இலட்சுமி புரம்பார்த்தேன்
விசையரெங்க புரமும் விஸ்வநாத புரமும்
கோமதிநாத புரமுங் குள்ளப்புரம் பார்த்தேன்
மல்லப்புரமும் மடப்புரமுங் கண்டேனுன்
வள்ளியம்மை புரமும் வடமலாதன்புரமும்
நயினுபுரமும் இராமலிங்க மாபுரமும்
பாப்பையா தன்புரமும் பகர்முத்துலா புரமும்
வெள்ளையா மாபுரமும் மிக்கபூதிப் புரமும்
ஸ்ரீ ரெங்கநாதபுரம் செண்பகமா புரமும்
இராயபுரமும் இனிய கிருஷ்ணு புரமும்
சங்கரா புரமும் சக்கம்மாள் தன்புரமும்
அருச்சுணுபுரமும் அம்மையார் தன்புரமும்
கான்சாபுரமும் கலியாண மாபுரமும்
குமந்தாபுரமுங் கோவிந்த புரம் பார்த்தேன்
கோகிலாபுரமுங் குருசாமியா புரமும்
சுந்தர லிங்கபுரமும் சூலப்புரம் பார்த்தேன்
செல்லையா தன்புரமும் செங்குன்ற மாபுரமும்
சோளபுரமும் சொக்கலிங்க மாபுரமும்

சமுட்டி புரமும் சரவண தன்புரமும்
தயிலா புரமும் தளவா புரம்பார்த்தேன்
தெய்வநாயக புரமும் திருமலா தன்புரமும்
நாகலாபுரமும் நல்லமங்கமா புரமும்
பொன்னுபுரமும் பொன்னையா தன்புரமும்
மங்காபுரமும் மாயபுரம் போய்ப்பார்த்தேன்
முல்லைப்புரமும் முத்துலிங்க மாபுரமும்
முத்துக்கிருஷ்ணபுரமும் முத்துக்காத்தா புரமும்
மலையாண்டி புரமும் மங்களமாய் நான்பார்த்தேன்

கோட்டை யென்ற வூர்களின் பெயர்.

திருச்சிக்கோட்டைகண்டு சித்தையன் கோட்டைவிட்டு
மதுரைக்கோட்டைகண்டு மார்க்கயன் கோட்டைவந்து
செங்கோட்டை கண்டு சிவர்கோட்டையும் பார்த்தேன்
அருப்புக்கோட்டை பெரிய அரளிக்கோட்டை யுடனே
புதுக்கோட்டையோடு பொம்மாட்சி கோட்டை கண்டு
இடையகோட்டைவந்து இராயகோட்டைக்கு வந்தேன்
மல்லாகோட்டை பார்த்து வாடிக்கோட்டை பார்த்தேன்
நாட்டரசன்கோட்டைகண்டு நடுவக்கோட்டைகடந்தேன்
ஆராம்புளிக்கோட்டை அம்மாகோட்டைக்கு வந்தேன்
செஞ்சிக்கோட்டை கண்டுசிவற்கோட்டையும் பார்த்தேன்
தேவகோட்டை பார்த்து திருக்கோட்டை கண்டேனன்
நிலக்கோட்டைகண்டு நேர்மலையான் கோட்டையிலே
பதினெட்டாங் கோட்டை பச்சைமலையான் கோட்டை
உப்புக்கோட்டையோடு உயர்கீழக் கோட்டைகண்டேன்
கவனங்கோட்டை கண்டு கள்ளிக்கோட்டைக்கு வந்தேன்
அம்பக்கோட்டை கண்டு அறியக்கோட்டைக்கு வந்து
வெம்பக்கோட்டை கண்டு விமல்வாடிக் கோட்டையிலே
அய்யங்கோட்டை யோடு அரும்பாளையங் கோட்டை
சாக்கோட்டை சத்துரு சங்காரக் கோட்டை கண்டேன்
மன்னரு கோட்டை விட்டு வந்தேனனிப் போது

நேறி யென்ற வூர்களின் பெயர்.

அந்தநேறி கண்டு ஆதநேறிக்கு வந்தேன்
நாங்குநேறிவிட்டு நடைய நேறிக்கு வந்தேன்

இய்யநேறிகண்டு இன்னுநேறிக்கு வந்தேன்
தத்தநேறிகண்டு சமைய நேறிகடந்தேன்
காடநேறிபார்த்து கலுங்கு நேறிக்கு வந்தேன்
தோடநேறி கண்டு சுந்தநேறிக்கு வந்தேன்
கோவநேறி பார்த்து கொடுவ நேறிக்கு வந்தேன்
அய்யநேறிபார்த்து அருமநேறிக்கு வந்தேன்
மாரநேறிபார்த்து மருமுருக நேறிகண்டேன்
கொத்த நேறிவிட்டு குருவநேறிக்கு வந்தேன்

பாறை யென்ற ஊர்களின் பெயர்.

மணப்பாறைபார்த்து மைப்பாறை கண்டுவந்தேன்
மட்டப்பாறை கடந்து மணிப்பாறையும் பார்த்தேன்
கூவம்பாறைகடந்து குடப்பாறை கண்டுவந்தேன்
சிப்பிபாறை பார்த்து தேவிபாறைக்கு வந்தேன்
தட்டப்பாறை பார்த்து தாணிப்பாறைக்கு வந்தேன்
கச்சனிப்பாறை கண்டு கபாலிப் பாறைபார்த்தேன்
நரிப்பாறை பார்த்து நவில்வேப்பம் பாறைகண்டேன்
குளிப்பாறைகண்டு குருவன்பாறைக்கு வந்தேன்
புளிப்பாறைபார்த்து புகழ் தட்டப்பாறை வந்தேன்

பேட்டை யென்ற ஊர்களின் பெயர்.

உடுமலைப்பேட்டை உயர் ராணிப்பேட்டை கண்டேன்
சாணூர்பேட்டைவிட்டு சைதாப் பேட்டைக்குவந்தேன்
அய்யம்பேட்டை கடந்து ஆரணிப்பேட்டை வந்தேன்
புதுப்பேட்டைதாண்டி புதிய பேட்டையில் குதித்தேன்
அருக்கம்பேட்டை கண்டு அம்மா பேட்டைக்கு வந்தேன்
ஆவரம் பேட்டை விட்டு அதிகாரி பேட்டை வந் ...
கல்லுப்பேட்டைகடந்து கண்ணுபேட்டைக்கு வந்தேன்.
காஞ்சிரம்பேட்டைகண்டு கண்ணுபேட்டை கடந்து
கொங்கம்பேட்டை கண்டு குடுக்கம்பேட்டைக்கு வந்தேன்

பாளையமென்ற ஊர்களின் பெயர்.

பாளையத்தில் மேலப் பாளையமும் நான்பார்த்தேன்
உத்தமபாளையமும் உயர்கோரிப் பாளையமும்
பேரான நல்ல பிள்ளையார் பாளையமும்
பச்சமுள்ள ராஜ பாளையமும் நான்பார்த்தேன்

...NADU ARCHIVES LIBRARY 102461
O-,194,K

ரெங்கபாளையத்தை நேர்மையுடன் கண்டேனே
கருக்கண்பாளையத்தை கருத்தாகவே பார்த்தேன்
அருவிநல்ல பாளையமும் அம்மா நற்பாளையமும்
தாதன்றன் பாளையமும் சலுப்பநல்ல பாளையமும்

குடி யென்ற வூர்களின் பெயர்.

கள்ளிக்குடி பார்த்து கட்டங்குடிக்கு வந்தேன்
முடிக்குடிகண்டு முதுவக்குடி பார்த்தேன்
எட்டிக்குடிபார்த்து இருக்கங்குடிக்கு வந்தேன்
பன்னைக்குடி பார்த்து பனங்குடியைக் கண்டேனே
இலுப்பக்குடி கண்டு ஏழைக்குடிபார்த்தேன்
பூலாங்குடியும் புளியங்குடி பார்த்தேன்
தூத்துக்குடியும் துருசாய்ப் பெருங்குடியும்
பருவக்குடியும் பாப்பாகுடி பார்த்தேன்
செக்கான்குடியும் திருக்கணங்குடி கடந்தேன்
கீழக்குடியும் கிழக்குமேலக்குடியும்
மருதங்குடி பார்த்தேன் மன்னார் குடிக்கு வந்தேன்
மாங்குடியும் கண்டு மாவங்குடி பார்த்தேன்
கம்பிக்குடிபார்த்து காரைக்குடிக்கு வந்தேன்
குன்னக்குடியுங் குருசென்ன லக்குடியும்
ஆயிக்குடியும் அழகாம் நரிக்குடியும்
பரம்பக்குடி பார்த்து பந்தல் குடிக்கு வந்தேன்
வீரக்குடி கண்டேன் விரசாக யிங்குவந்தேன்
உடங்குடியைக் கண்டு உற்சாகங் கொண்டேனே

மங்களமென்ற வூர்களின் பெயர்.

திருமங்கலங்கடந்து சித்திரமங்கலம் பார்த்தேன்
கொடி மங்கலமுங் கூர்காரிமங்கலமும்
சாத்தமங்கலம் பார்த்துச் சக்கிமங்கலம் பார்த்தேன்
காரிமங்கலம் பார்த்து கண்டு கீழமங்கலத்தில்
மன்னாடிமங்கலமும் வந்துமேல் மங்கலத்தில்
பொன்னமங் கலங்கடந்து பூவமங்கலம் பார்த்தேன்
மாரிமங்கலந் தனியா மங்கலமும் நான்பார்த்தேன்
சேந்தமங்கலம் பார்த்துச் சீர்பாத மங்கலமும்
காளிமங்கலங் கடந்து கடம்பமங்கலத்தில் வந்தேன்

சேரியென்ற ஊர்களின் பெயர்.

கன்னிசேரிகண்டு காரிசேரிக்கு வந்தேன்
கொக்களாஞ் சேரிவந்து குருவாச் சேரிக்கு வந்தேன்
புதுச்சேரிபார்த்து பொன்னுசேரிக்கு வந்தேன்
விலாச்சேரிகண்டு வேலாஞ்சேரிக்குள் நின்றேன்
பாச்சேரி ஊர்சேரி பகர்வீரசேரி வந்தேன்
சோலை சேரிவிட்டு சுந்தரசேரிக்கு வந்தேன்
அலப்பசேரி கண்டு அயில்சேரியும் பார்த்தேன்
மான்சேரிவிட்டு வந்தேனுனிப்போது

குறிச்சியென்ற ஊர்களின் பெயர்.

அம்பலக்குறிச்சி வந்து அரவக்குறிச்சி கண்டேன்
ஆள்வார்குறிச்சியுடன் அநுமக் குறிச்சி வந்தேன்
இலவங்குறிச்சி விட்டு இராஜக்குறிச்சி கண்டேன்
உரங்காக் குறிச்சி வந்து ஊஞ்சான் குறிச்சி வந்தேன்
எல்லைக் குறிச்சிவந்து இடைய குறிச்சி கண்டேன்
ஐயங்குறிச்சி விட்டு அலவாக் குறிச்சி வந்தேன்
ஓடக்குறிச்சி கண்டு ஒடுவான் குறிச்சி கண்டேன்
கல்லிடைக்குறிச்சி கண்டு கற்குறிச்சியும் பார்த்தேன்
கழுவங்குறிச்சி வந்து காலாங்குறிச்சி கண்டேன்
கல்லுக்குறிச்சி கண்டு கண்டிக் குறிச்சி வந்தேன்
குழக்கட்டாக் குறிச்சிவந்து குமார குறிச்சிகண்டேன்
கொண்டக்குறிச்சி விட்டு கோலாகுறிச்சி வந்தேன்
சம்புநாடாற்குறிச்சி சங்கங் குறிச்சி கண்டேன்
சிலைமலைக்குறிச்சி வந்து திருமங்கலக்குறிச்சி
சிராங்குறிச்சி கண்டு செட்டி குறிச்சி கண்டேன்
சுக்கான் குறிச்சியோடு சூரங்குறிச்சியையும்
செங்குறிச்சி பார்த்து செல்லக் குறிச்சி வந்தேன்
சொக்கலாங் குறிச்சிவிட்டுச் சோளங்குறிச்சி கண்டேன்
தட்டக்குறிச்சி கண்டு தாதங்குறிச்சி வந்தேன்
திம்மக்குறிச்சி விட்டு சேடகுறிச்சி கண்டேன்
தெப்பங்குறிச்சி விட்டு தேவங்குறிச்சி வந்தேன்
துலுக்கன்குறிச்சி விட்டு சுண்டங் குறிச்சி கண்டேன்
நடுவக்குறிச்சி வந்து நம்பிக் குறிச்சி வந்தேன்
நல்லுக்குறிச்சி கண்டு நல்லாங் குறிச்சி வந்தேன்

நெடுங்குறிச்சி விட்டு நெடுமால் குறிச்சி கண்டேன்
தொவரங்குறிச்சியுடன் சூலக்குறிச்சி கண்டேன்
பட்டக்குறிச்சி பாஞ்சாலங் குறிச்சிவந்தேன்
படைப்புக்குறிச்சி கண்டு பாம்புக் குறிச்சி வந்தேன்
பாலாகுறிச்சி விட்டு பட்டுக்குறிச்சி கண்டேன்
பாப்பான்குறிச்சி கண்டு பாலக்குறிச்சி விட்டேன்
புளியங்குறிச்சிவிட்டு பொன்னங்குறிச்சி வந்தேன்
பூலாங்குறிச்சிகண்டு புதுக்குறிச்சி யும்பார்த்தேன்
மங்களக்குறிச்சி வந்து மல்லக் குறிச்சி கண்டேன்
மதவக்குறிச்சி விட்டு மாமாங் குறிச்சி வந்தேன்
மரவங்குறிச்சி கண்டு மலைக்குறிச்சியும் பார்த்தேன்
முசுட்டக் குறிச்சி விட்டு மூலக் குறிச்சிவந்தேன்
முத்துக்குறிச்சி கண்டு முடவக்குறிச்சி கண்டேன்
வடமலைக்குறிச்சி விட்டு வள்ளிக்குறிச்சி வந்தேன்
வெள்ளிக்குறிச்சி கண்டு வீரக்குறிச்சி விட்டேன்
வெங்கலக் குறிச்சி விட்டு மேலக்குறிச்சி கண்டேன்

பலவூர்களின் பெயர்.

திருப்பரங் குன்றம் திருக்கழுக் குன்றம் பார்த்தேன்
சின்ன மலைக் குண்டு சீர்சயிலக்குண்டு கண்டேன்
வத்தலக் குண்டும் மகிழ் பண்ணிக் குண்டுகண்டேன்
குசவன் குண்டு பார்த்து கூத்தியார் குண்டு கண்டேன்
மதுரை நெடுமதுரை மானு மதுரை கண்டேன்
வடமதுரையோடு வடகீழ் மதுரை வந்தேன்
சந்திர கிரியும் சதுரகிரியும் பார்த்தேன்
சிவகிரியும் பொற்கிரியும் சேர்ந்த முசுண்டகிரியும்
கோணகிரி பார்த்து கூடகிரியும் பார்த்தேன்
தென்மலை ஊற்றுமலை சேர்ந்த குருமலையும்
கழுகுமலை மான் மலையுங் கடந்தேன் வடமலைக்கு
மலை யோடு வாண வாமலையும் போய்ப் பார்த்தேன்
சங்கரன் கோவில் சார்ந்த கூடக்கோவில்
பாம்புக்கோவில் கடந்து பகர் நாகர் கோவில் வந்தேன்
மாஸ்திரட்டார்சந்தை மகிழ்குள்ளுச் சந்தைகண்டேன்
டெபேதாரின் சந்தையுடன் திருச்சந்தையும் பார்த்தேன்
பாரப்பத்தியோடு பாலமேடும் பார்த்தேனுன்

எலியாருபத்தியுடன் ஏனாதியும் பார்த்தேன்
மொச்சிபத்தி கண்டு மூழிக்கரையும் பார்த்தேன்
சிவகாசியோடு தென் காசியும் பார்த்தேன்
சிந்தாமணியும் திருப்பாலையு யறிந்தேன்
திருநெல்வேலிநாடு சிந்துபூந்துரை பார்த்தேன்
சிவகங்கை கண்டேன் திருப்புவனமுந் தெரிந்தேன்
சிறுவயல் பார்த்து தேவ சேரிக்கு வந்தேன்
சோளவந்தான் கண்டு சோளங் குருணி கண்டேன்
செக்கானூற்றும் பார்த்து திருத்தலை பூண்டிகண்டேன்
சுந்தரபாண்டியமும் சுரண்டையும் நான்பார்த்தேன்
கோம்பை தேவாரங் குமராபுரம் பார்த்தேன்
காரிசாத்தான் பெரிய கன்னியாகுமரி வந்தேன்
கடையங்கடந்து காரியாண்டிக்கு வந்தேன்
காரைக்கிணறுங் கள்ளந்தரி பார்த்தேன்
கல்லூரணியுங் கலைக்காடும் போய்ப் பார்த்தேன்
கூடலூர்கம்பங் குருவனூத்தும் பார்த்தேன்
கயத்தாரு பார்த்து கலங்கமென்ற ஊருவந்தேன்
கச்சை கட்டிபார்த்து கன்னி வாடிககி வந்தேன்
கோடக் கன்னி பார்த்து கொக்கிலாஞ் சேரிவந்தேன்
சேர்மாதேவியோடு திருத்தங்கால் பூவாணி
கயற்றாறுகண்டு கலைக்காடும் வையூரும்
சுந்தரங்குண்டு சொல்லுமுசிரி கண்டு
பத்தமடைபார்த்து பாங்காய்க் குருந்தமடை
திருவானைக் காவல் சேர்ந்தரெங்கமும் பார்த்தேன்
கன்னியாகுமரியுடன் கருவாம்ப லூருகண்டேன்
கோச்சடை பார்த்து கொண்டைமாரிக்கு வந்தேன்
கூவம்பாறைபார்த்து கொல்லகொண்டா னுக்குவந்தேன்
சத்திரகொண்டானும் தாழையூற்றும் பார்த்தேன்
திருவேடகம்பார்த்து திருப்பாச்சேத்திக்கு வந்தேன்
தம்பத்து லவாணியும் தன்னூத்து ஊருகண்டேன்
நகரய்நெடுவயலி நத்தம் நெய்க்குப்பை கண்டேன்
பசுவந்தனையும் பால்வநத்தமும் பார்த்தேன்
புளியரையின் பட்டணமும் பூவந்தி பொன்மேனி
பூண்டி திருத்தலைப் பூண்டியும் பார்த்து வந்தேன்

மணியாச்சிபார்த்து மாயேந்திர வாடிவந்தேன்
மரத்தோணி மாரணியும் மானகிரியும் பார்த்தேன்
மானந்தவாடி மதிச்சியமுங் கண்டேனுன்
மண்டலமாணிக்கமொடு மாந்தோப்பும் கண்டேனுன்
வீரவநல்லூரும் விஸ்வநத்தம் பார்த்தறிந்தேன்
விராட்டிபத்து பார்த்து வீரபாண்டிக்கு வந்தேன்
வத்திராயிருப்பும் வயலியென்ற ஊர்பார்த்தேன்
வீரிருப்புகண்டு விஸ்வநாதபுரிக்கு வந்தேன்
வீரசிகாமணியும் விருதைநகர் பார்த்தேனுன்
வரகனியும் வல்ல வன்னிக்காந்தை கண்டேன்
வானரமுட்டி யோடு மல்லிகையூர் பார்த்தேனுன்

ஆரக்கட்டி விபூதி கொடுத்தல்.

மண்டுவணங்கினேன் மாமலையைத் தஞ்சமென்றேன்
பூமிவணங்கினேன் பூலோகந் தஞ்சமென்றேன்
இருபத்தோர்பந்தி அருபத்தோர் சேனைகளை
பாதம்பணிந்தேன் பச்சைமால் தஞ்சமென்றேன்
மாதுபிடாரி வல்லியே ராக்காயி
மாசானக்காளி மாகாளி துர்க்கையம்மா
வடபக்கமாயிருந்து மடியில்வைத்துக் காப்பாற்று
சோணைமுத்து வீரன் சுடலைமுத்து ராக்குமுத்து
வல்லவனே சப்பாணி வல்லகருப்பா நீ
கீழ்பக்கமாயிருந்து கிரும்பைவைத்து கார்ப்பாய்நீ
இருளப்பமூர்த்தி எங்கள் முனியாண்டியேநீ
சங்கிலிவீரன் சமையனே இப்போது
தென்பக்கமாயிருந்து தீர்க்கமுடன் கார்ப்பாய்நீ
மதுரைவீரன் மாடன் மார் நாட்டுப் பொன்கருப்பன்
பாவாடைராயன் பனையடியா னிப்போது
மேல்பக்கமாயிருந்து வீரமுடன் கார்த்திடுவாய்
குருசாமிவாக்கால் கொடுத்தேன் விபூதியுந்தான்
முள்ளுமுறியாமல் முடித்தபூ வாடாமல்
காப்பாற்றி கொள்ளுமென்றேன் கார்ப்பாய்நீயிப்போது

கோடாங்கிகள் பூசாரிகள் முக்கியமாய்த் தெரிந்து

கொள்ள வேண்டிய கருத்துரைகள்.

பெண் சாமிகள் பெயரும் பெண்கள் பெயரும் ஆண் சாமிகள் பெயரும் ஆண்பிள்ளைகள் பெயரும் ஊர்களின் பெயரும் சொல்ல வேண்டியதிருந்தால் பெண் சாமிகள் பெண்பிள்ளைகள் பெயர் அம்மாளென்றும் ஆச்சியென்றும் ஆயியென்றும் அக்காளென்றும் நான்கு விதமாகப் பிரித்துச் சொல்லி யிருக்கிறது அதில் கோறிய பெயர் வரவில்லையானால் அம்மன் பெயர்கள் தனித் தனியாகச் சொல்லி யிருக்கிறது அதில் வரும் அம்மன் பெயரை யெடுத்து சொன்னால் நினைத்த பெயர் வந்துவிடும்.

ஆண்சாமிகள் பெயரும் ஆண்பிள்ளைகள் பெயரும் சொல்ல வேண்டுமானால் ஆண்பிள்ளைகள் பெயரை சாமி யென்றும் லிங்கமென்றும் அப்பனென்றும் முத்துவென்றும் அய்யாவென்றும் இன்னும் பல தினுசாக ஆறு விதமாகச் சொல்லி யிருக்கிறது அதிற் கோறிய பெயர் வரவில்லை யானால் சாமி பெயர்களைத் தனித் தனியாகச் சொல்லி யிருக்கிறது அதில் வரும் சாமி பெயரை யெடுத்து விரித்துச் சொன்னால் நினைத்த பெயர் வரும்.

ஊர்ப் பெயர்கள் சொல்லவேண்டிய திருந்தால்.

ஊரின்பெயர் பட்டியின் பெயர் குளத்தின் பெயர் புரத்தின்பெயர் கோட்டையின்பெயர் நேறியின் பெயர் பாறையின் பெயர் குடியின்:பெயர் மங்கலத்தின் பெயர் குறிச்சியின்பெயர் என்றும் பத்து விதமாகச் சொல்லி யிருக்கிறது அதில் யெந்த அயிட்டப் பெயரோ அதை யெடுத்

துச் சொல்ல ஊர்ப்பெயர் வந்துவிடும் அதில் நினைத்த ஊர் வரவில்லை யானால் பல ஊர்களாக ஒரு அயிட்டம் சொல்லியிருக்கிறது அதை யெடுத்துச் சொன்னால் நினைத்த ஊர்ப்பெயர் வந்து விடும்.

பூசாரிகளுக்கு அறிக்கை.

இதிற்கண்ட சக்கரங்களை பூசிக்கிறதா யிருந்தால் ஒரு மாதம் வரை தினந்தோறுங் குளித்து முழுகி இரவு வடக்கு முகமா யிருந்துகொண்டு சூடன் கொளுத்தி வைத்து ஓம் அம் உம் சிவாயநமா வென்று தினம் 108 உருவாக 1008 உருப் போட்டு சித்தியாக்கிக் கொள்ளவும் இதைத் தினமுஞ் செய்யலாம் அல்லது நாலுநாள் மூன்றுநாள் விட்டுவிட்டுஞ் செய்யலாம் அதனால் குற்றம் ஒன்று மில்லை இது சித்தியான பின் தேவதைகளும் மந்திரங்களும் சித்தியாகும்.

கோடாங்கி மாலை இரண்டாம் பாகம்.

முற்றிற்று.

இந்த புஸ்தகமும் பெரிய அழகர் வர்ணிப்பு, தசாவதார வர்ணிப்பு, பாண்டிமுனி வர்ணிப்பு, கிருஷ்ணாவதார வர்ணிப்பு, மாயாவதாரன் வர்ணிப்பு, வீமன் சண்டை வர்ணிப்பு முதலிய மற்ற தினுசுகளும் வேண்டியவர்கள் அடியிற் கண்ட விலாசதாரிடம் நேரிலும் வீ, பி, தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. இராமசாமிக் கோன்.

புத்தகசாலை புதுமண்டபம், மதுரை.

உ

கோடாங்கி பூசாரி களுக்குறிய.

# மந்திர சக்கர பூஜா விதி.

## எல்லாவிதமான வியாதிகள் சீக்குகள் தீருதற்கு மந்திர சக்கரம்.




இதற்கு மந்திரம்.

ஹரிஓம் சரவணபவ தேவா நசி மசி சுவாஹா எவ்வித சீக்குகளானலும் குணமாக வேண்டுமென்று ஆயிரத்தெட்டு உருப் போடவும்.

தங்கம் வெள்ளி செப்பு இந்த மூன்றுவித லோகங்களில் கிடைத்ததை வாங்கி மூன்றங்குல நிகல அகலமாகத் தகடடித்து இந்தச் சக்கரம்போல் அதிலெழுதிக் கொண்டு பக்தியாக வடக்கு முகமாயிருந்து கொண்டு

இலைபோட்டு மஞ்சள் பிள்ளையார் பிடித்து இலையில் கிழக்கு முகமாக வைத்து தேங்காய் பழம் வெற்றிலை பாக்கு அவல் கடலை சருக்கரை வைத்து புஷ்பஞ் சாத்தி அரளி புஷ்பத்தால் மந்திரத்தைச் சொல்லி 1008 உருப் போட்டு சூட தீபா ராதனை கொடுத்து தகட்டை கட்ட பிணி விலகும் பிள்ளை யுண்டாகும்.

இந்தச் சக்கரத்தை தினந்தோறும் பூசித்துவந்தால் வாக்குப்பலிதமும் தேவதைகளும் கைவசமாகும்.

---

பேய் பிசாசைக் கண்டு பயந்த வர்களுக்கும், பிசாசு பிடித்தவர்களுக்கும் குணமாக்க மந்திர சக்கரம்.




இதற்கு மந்திரம்.

ஹரி ஓம் மங் சிங் சிவாய நமா பிசாசு விலகச் சுவாஹா வென்று ஆயிரத் தெட்டு உருப் போடவும்.

முன்சொல்லியபடி தகடடித்து இந்தசக்கரப்போல் அதிலெழுதிவைத்துக் கொண்டு நீ-வடக்கு முகமாயிருந்து இலைவிரித்து மஞ்சள் பிள்ளையாரைக் கிழக்கு முகமாய்வைத்து அதன்முன்பு தகட்டைவைத்து முன் சொல்லியபடி தேங்காய் பழங்கள் வைத்து பிசாசு பிடித்தவர்களை குளித்து முழுகி முன்பாக தெற்குமுகமாயிருக்கவைத்து செவ்வரளி புஷ்பத்தால் மேலேசொல்லிய மந்திரத்தைச் சொல்லி ஆயிரத்தெட்டு உருப்போட்டு தூபதீபங்கொடுத்து தகட்டை கழுத்திலே கட்ட பேய் பிசாசுவிலகிவிடும் முகத்தில் லட்சுமிகர முண்டாகும் பயம் நீங்கும் பேய் பிடித்த பெண்ணை வைத்து உடுக்கடித்து பெயர்சொல்லும்படி செய்துமுடி கொடுத்த பின்பு விரட்டிவிட்டு தகட்டை கழுத்தில் கட்டவும் அப்படி முடி கொடுக்காத பேய்களுக்கு வீட்டில் பூஜையைச்செய்து தகட்டைக் கட்ட பேய்,பிசாசு விலகிவிடும்.

---

வீட்டிலிருந்த கருப்பு விலகுவதற்கும் செய்வினை பில்லி சூனியம் நீங்குவதற்கும் மந்திர சக்கரம்.




இதற்கு மந்திரம்.

ஹரிஓம் வம் புரோம் பில்லி சூனியம் விலகச் சுவாஹா யென்று ஆயிரத்தெட்டு உருப் போடவும்.

முன் சொல்லியபடி தகடடித்து இந்தச் சக்கரம் போல் எழுதிவைத்துக் கொண்டு நீ வடக்கமுகமா யிருந்து இலைவிரித்து மஞ்சள் பிள்ளையாரைக் கிழக்கு முகம்வைத்து முன்சொல்லியபடி தேங்காய் பழங்களை இரண்டுபங்கு வாங்கி ஒருபங்கைத் துண்டாக வைத்து விட்டு சேவலும் அரிசியும் பொரியும் பச்சை தோண்டியும் வாங்கி இலைமத்தியில் தோண்டியை பச்சரிசி மேல் வைத்து தோண்டிமேல் மாவிலை தேங்காய்வைத்து அதற்குள் அரிசிப் பொரியைப் போட்டு மாலைசாத்தி தக ட்டை முன்பு வைத்து ஒருபங்கு தேங்காய் பழங்களை வைத்து தூப தீபங் கொடுத்து அரளி புஷ்பத்தால் மேலே சொல்லிய மந்திரத்தைச் சொல்லி 1008 தரம் உருப்போட்டு வீட்டுக்கு முதன்மையானவர்களை முன்பு யிருத்தி வைத்து அவர்கள் முன்பாக சூடன் கொளுத்தி வைத்து சேவலை யெடுத்து தலையைச் சுத்தி யறுத்து இரத்தப் பெலியிட்டு வீடு முழுவதும் இரத்தப் பெலி கொடுத்து விட்டு தகட்டை யெடுத்து வீட்டுக்குடை யவர்களுக்கு கட்டி விட்டு மற்றொரு சேவலும் தேங் காய் பழங்களை ஒருவரை தூக்கிக் கொள்ளும்படி செய்து நீ பச்சத் தோண்டிக்கு சூடதீபா ராதனை கொடுத்து பொரியைத் தூவிக் கொண்டே ருத்திரகளம் போய் முன்போல் பூஜை நடத்தி குளி தோண்டி அதற்குள் தோண்டியை வைத்து மயான பூஜை செய்து தேங்காய் பழங்களை அதற்குள் போட்டு சூடதீபாதாரனை கொடுத்து நீ இங்கே இருவென்று சொல்லி சேவல் பலி கொடுத்து குழியை மூடிவிட்டு குளித்து வீடு வந்து சேரவும்.

இந்தப்படி செய்தால் வீட்டிலுள்ள கருப்பும் பில்லி சூனியமும் மயானத்திற்கு போய் விடும் வீட்டி லிருப் பவர்களுக்கு நல்ல சுகமும் பெருவாழ்வுங் கிடைக்கும் மயானபூஜைக்கு மட்டும் ரொட்டி மதுயாமிசம் வைத் துப் பூசிக்கவும்

நவக்கிரக தோஷம் நீங்கப் பரிகாரம்.

நவக்கிரக பரிகாரம் செய்ய வேண்டியவர்கள் இந்த சக்கரத்தை முன்னாடியே உருப் போட்டு சித்தி செய்து வைத்துக் கொள்ளவும்.

இதற்கு மந்திர சக்கரம்.




மந்திரம்.

ஹரி ஓம் ஐயுங் கிலியும் செளவும் சரஹணபவா என்று 1008 உருப் போடச் சித்தியாகும்.

செம்புத் தகட்டில் இந்தச் சக்கரம் போல் மந்திர அட்சரங்களை எழுதி பூஜையில் வைத்து நவதானியம் ஒன்பது வகையுந் தனித்தனியே வைத்து கிரகத்தின் பெயர் சொல்லி பூஜாவிதி முறைப்படி தேங்காய், பழம், சூடன், சாம்புராணி, தீப தூபங் கொடுத்து அரளிப் பூவினால் 1008 உருப் போட்ட பின் தகடு கட்டிக் கொள்ளக் கூடியவர்களை நேரே நிறுத்தி ஷியார் பேரைச் சொல்லிக் கட்டி நவக்கிரக தோஷம் நிவாரண மாகும்.

பேய் பிசாசுகளை விரட்டுதற்கு மந்திரிக்க.

மந்திர சக்கரம்.




TAMIL NADU ARCHIVES
No. 10246

இதற்கு மந்திரம்.

ஹரி ஓம் அவ்வும் யவசிநம சுவாஹா என்று 1008 உருப் போடவும்.

ஒரு தகட்டில் இந்த சக்கரம் போல் மந்திர அச்சரங்களை யெழுதி பூஜையில் வைத்து முறைப்படி தேங்காய், பழம் புஷ்பம், சூடன், சாம்பிராணி தீப தூபங் கொடுத்து அரளி புஷ்பத்தினால் பேய் பிடித்த பெண்களை முன்பாக உட்கார வைத்துக் கொண்டு 108 உருச் செபித்து அந்த தகட்டை யெடுத்துக் கட்ட பேய் பிசாசு முதலியது விலகி ஓடிப்போகும் இதற்கு அடையாளம் ஷை பெண் முகத்தில் வசீகர முண்டாகும்.

கோடாங்கி மாலை இரண்டாம் பாகம்.

மந்திர சக்கர பூஜா விதி

முற்றிற்று.

காப்பி 1000, நான்காவது பதிப்பு, 1956.

# விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| பெரிய அழகர் வர்ணிப்பு | 0 | 8 | 0 |
| சிறிய அழகர் வர்ணிப்பு | 0 | 4 | 0 |
| பெரிய பாகவத வர்ணிப்பு | 0 | 12 | |
| கிருஷ்ணாவதாரன் வர்ணிப்பு | 0 | 3 | |
| மாயாவதாரன் வர்ணிப்பு | 0 | 4 | 0 |
| தசாவதார வர்ணிப்பு | 0 | 4 | 0 |
| பாண்டி முனி வர்ணிப்பு | 0 | 2 | 0 |
| கோடாங்கி மாலை 1-வது பாகம் | 0 | 8 | |
| ஷை 2-வது பாகம் பனிரெண்டு | | | |
| ராசி மூத்துக்குறி சேர்ந்தது | 0 | 8 | |
| வீமன் சண்டை வர்ணிப்பு | 0 | 2 | |
| கிருஷ்ணன் தூதுக்கும்மி | 0 | 2 | 0 |
| இராமாயணக் கும்மி | 0 | 4 | 0 |
| ருது நூல் சாஸ்திரம் | 0—3—0 | | |
| கர்தானுபூதி மூல மந்திர சக்கரத்துடன் | 0—8—0 | | |

மேற்கண்ட புத்தகங்களும் இன்னும் மற்ற வேண்டிய
திணுசுகளும் நேரிலும் வீ பீ தபால் மூலமாகவும் பெ
றுக்கொள்ளலாம் கியாட்லாக் வேண்டுவோர் விலாச
தெரிவித்தால் அனுப்பக்கூடும். இப்படிக்கு.

குரு. இராமசாமிக் கோன்,

புத்தகசாலை, புதுமண்டபம் மதுரை.